பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 03 வியாழக்கிழமை 19.08.2021 கதிர் 287

### இது ரகசியம் அல்ல!

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் – கட்சித் தலைவர்களின் – கூட்டம் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது.

வெளியில் வரும் போது, புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட

பக்கம்02

# வயிற்றைக் கிழித்தும் தூக்க மருந்து விழுங்கியும் இலங்கைத் தமிழ் அகதிகள் தற்கொலை முயற்சி!

## திருச்சி சிறப்பு முகாமில் நேற்று பெரும் பதற்றம்

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் சிலர் வயிற்றைக் கிழித்துக் கொண்டும், அதிகளவு தூக்க மருந்துகளை விழுங்கியும் நேற்று தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தம்மை விடுவிக்குமாறு கோரி பலகட்ட போராட்டங்களை முன்னெடுத்தும் பலனிக்காத நிலையில் விரக்தியில் இவர்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

புலம்பெயர்ந்து தமிழகத்தினுள் அடைக்கலம் புகுந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருபாலார் சாதாரண அகதிகள் முகாமிலும்,

2



# இரண்டு வாரங்களுக்கு முழு ஊரடங்கு அவசியம்

## ஜனாதிபதியிடம் சு.கவும் வலியுறுத்து

**நாட்டில் கொரோனா வைரஸ் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இதைக் கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு நாட்டில் முழுமையாக ஊரடங்கு உத்தரவை ஜனாதிபதி பிறப்பிக்க வேண்டும்.**

**– இவ்வாறு அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.**

2



## கிளிநொச்சியில் கொரோனாவால் வயோதிபர் சாவு!

கிளிநொச்சி, ஓகஸ்ட் 19

கிளிநொச்சியில் உயிரிழந்த வயோதிபர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

90 வயதுடைய குறித்த வயோதிபர் திடீரென உயிரிழந்த நிலையில் அவருடைய பி.சி.ஆர். மாதிரிகள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்குத் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 86 பெண்கள் உட்பட மேலும் 170 பேர் சாவு

இலங்கையில் மேலும் 170 கொரோனாத் தொற்றாளர்கள் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 604 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 170 பேரில் 84 ஆண்களும்,

2

## நேற்று மட்டும் 3,660 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

இலங்கையில் நேற்று மாத்திரம் 3 ஆயிரத்து 660 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 69 ஆயிரத்து 343 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 188 பேர் நேற்று குணமடைந்து

2

## தர்மபுரம் பகுதியில் புதையல் அகழ முயற்சி; நால்வர் கைது

கிளிநொச்சி மாவட்டம், தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அழகாபுரி பகுதியில் புதையல் அகழ முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றிரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் வவுனியாவைச் சேர்ந்த இருவர்,

2

## இன்று முதல் வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியில் செல்ல முடியும்

### புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

சுகாதார அமைச்சால் புதிய சுகாதார வழிகாட்டல் கோவை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரமே வெளியே செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தொழில் மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வெளியே செல்லும்போது இது தாக்கம் செலுத்ததாது எனப் புதிய சுகாதார வழிகாட்டல் கோவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், வழிபாட்டுத்தலங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் சிறப்பு அங்காடிகள், ஒரு சந்தர்ப்பத்தில் அதன் கொள்ளளவில் 25 சதவீமானோருடன் இயங்க முடியும்.

இதேவேளை,

2

## வடக்கில் ஐந்து குழந்தைகள் உட்பட 144 பேருக்கு நேற்று தொற்று உறுதி

வடக்கு மாகாணத்தில் நேற்று ஐந்து குழந்தைகள் உட்பட 144 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகள் உட்பட 105 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்து 04 நாள்களேயான பச்சிளம் பெண்

2

## அரியாலையைச் சேர்ந்த பெண் கொரோனாத் தொற்றால் சாவு!

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அரியாலை கனகரத்னம் வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 187 ஆக உயர்வடைந்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்தார்.

முந்திய வாரத்தில் அமெரிக்கத் தூதவரின் இல்லத்தில் விருந்துடன் சுமந்திரன் – பீரிஸ் சந்திப்பு நடைபெற்றமை தொடர்பாக முதல் நாள்தான் ஆங்கில வார இதழ்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதைக் குறிப்பிட்டு பீரிஸ் கேள்வி தொடுத்தார்.

*“என்ன சுமந்திரன் எங்கள் சந்திப்பால் உங்களுக்குக் கட்சிக்குள் பிரச்சினை போலும்.”*

*“இல்லை, இல்லை. அப்படி ஒன்றும் இல்லை. என்னை விட வேறு யாராவது எம்.பிக்கள் பேச விரும்பினால் பேராசிரியர் பீரிஸுடன் பேசலாம் என்று கூறியிருக்கின்றேன். தயார் என்றால் வந்து பேசட்டுமே.”* – என்று பதிலளித்தாராம் சுமந்திரன்.

இந்தத் தகவலை ஊடக நண்பன் ஒருவன் எனக்குக் சொன்னான். நான் சரியான பதில் என ஆமோதித்தேன்.

*“சட்ட விவகாரங்கள் குறித்து, அரசமைப்பு விடயங்கள் குறித்து, சட்டம் தெரிந்தவர்தானே பேசமுடியும், பேச வேண்டும். எங்கள் பக்கத்தில் சட்டம் தெரிந்தவர் – தேர்ந்தவர் – சுமந்திரன்தானே...!”* – என்று கூறினேன் நான்.

*“சட்டத்தை விடுங்கோ அண்ணை. முதலில் பீரிஸுடன் இந்த விவகாரங்களை பேசுறதுக்கு ஆங்கிலச் சொல்லாடல் தெரிய வேண்டும். எங்கடை பக்கத்திலை எத்தனை பேருக்கு அந்த வலிமை இருக்கு...? அதுக்குள்ள சுமந்திரன் பேசப் பொயிட்டார் எண்டு இவையளுக்குக் கொதிக்குதாம்...!”* – என்று சீறினார் அந்த யூனியர் பத்திரிகையாளர்.

*“அதுக்கு ஏன் தம்பி நீர் கொதிக்கின்றீர்... உதெல்லாம் அரசியலிலை சகஜம்”* என்று கூறி நான் சமாளித்து வைத்தேன்.

எனக்கு என்னவோ அந்த ஜூனியர் தம்பி கொதித்ததில் நியாயம் இருப்பது போல மனதில் படுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

நாட்டை முடக்கும் அத்தியாவசியத்தை அரசுக்கு எடுத்துரைத்து வலியுறுத்திய பல தரப்புகளும், அரசு அதற்கு சரிப்பட்டு வராத நிலையில் தாங்களாகவே ஒன்று சேர்ந்து நாட்டை முடக்கி அரசுக்கு எதிராகப் பாடம் படிப்பிக்கத் தயாராகி விட்டன.

இதை ஒட்டி ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் ஒன்றிணைந்திருக்கும் எல்லாக் கட்சிகளுமே சேர்ந்து நேற்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன. நாட்டை முடக்கித் தொற்றுப் பரவலைத் தடுப்போம் என்று அவை பொதுமக்களைக் கோரியுள்ளன.

அந்த அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்திருக்கலாம். குறைந்த பட்சம் தனித்தாவது கூட்டமைப்பும் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கலாம். தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் பலர் இதனை ஒரு குறையாகச் சுட்டிக்காட்டினர். கூட்டமைப்பும் தன் பங்குக்கு இதே விடயத்தை வலியுறுத்தி தன் தமிழ் மக்களுக்கென மீள ஓர் அறிக்கை வெளியிடுவது நல்லது.

– மின்னல் –

## வடக்கில் ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குழந்தை ஒன்றுக்கும், ஒரு வயதான பெண் குழந்தை ஒன்றுக்கும், நான்கு வயதான ஆண் குழந்தை ஒன்றுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கிளிநொச்சி அக்கராயன்குளத்தில் பிறந்து 10 மாதமேயான குழந்தை ஒன்றுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒரு வயதும் 10 மாதமுமான பெண் குழந்தை ஒன்றுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 86 பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
86 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 24 ஆண்கள், 16 பெண்கள் என 40 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 130 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 60 ஆண்களும், 70 பெண்களும் அடங்குகின்றனர்.

## தர்மபுரம் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணம், விசுவமடுப் பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து புதையல் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கைதானவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## வயிற்றைக் கிழித்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்னொருபாலார் திருச்சி சிறப்பு முகாமிலுமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள போதிலும் தமது உறவுகளுடன் தம்மைச் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு கோரி குறித்த போராட்டக்காரர்கள் கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கடந்த மாதம் போராட்டக்காரர்களை சந்தித்து நிலுவையிலுள்ள அவர்களின் வழக்குகளை விரைவாக முடித்து தாயகம் செல்ல விரும்புவோரைத் தாயகம் அனுப்புவதாகவும், ஏனையவர்களுக்கு சாதாரண முகாமிற்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தனர்

காலங்கடந்தும் இன்னமும் தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்தே குறித்த உறவுகள் நேற்று தமது வயிற்றைக் கிழித்துக்கொண்டும், அதிக தூக்க மாத்திரை அருந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் 15 பேர் தூக்க மாத்திரை அருந்தியதோடு, மூவர் வயிற்றைக் கிழித்துக் கொள்ள, மேலும் மூவர் தூக்குமாட்டியதோடு, இருவர் கைகளை அறுத்துக் கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து இலங்கைத் தமிழ் அகதிகளையும் சிறைக் காவலர்கள் மாவட்ட அரச வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களால் சிறப்பு முகாமில் பயத்துடன் கூடிய பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது என அங்கு தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் சுட்டிக்காட்டினர்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 16 ஆயிரத்து 528 ஆக உயர்வடைந்துள்ளது.

# கடமைகளைப் பொறுப்பேற்ற கையுடன் இந்தியத் தூதருடன் பீரிஸ் நேரில் பேச்சு



புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் பீரிஸ் நேற்று தமது கடமைகளை அமைச்சில் பொறுப்பேற்றார்.

அதன்பின்னரே மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

புதிய வெளிவிவகார அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர், இரு நாட்டு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடினார்.

# ரிஷாத்தைத் தொடர்ந்தும் மறியலில் வைக்க உத்தரவு



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் ரிஷாத் பதியுதீன் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு 117 நாள்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

# வவுனியாவில் 109 பேருக்குத் தொற்று!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 109 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில இன்று வெளியாகின.

அதற்கமைய 109 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில், 42 பேர் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்ட நிலையில் தாமாக முன்வந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பவற்றில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்த நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## இரண்டு வாரங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் முழுமையாக ஊரடங்கு உத்தரவைச் செய்வதன் ஊடாகவே கொரோன வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். எனவே, இது தொடர்பில் ஜனாதிபதி சாதகமான முறையில் பரிசீலிக்க வேண்டும் – என்றார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இன்று முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை அனைத்து உடற்பிடிப்பு, உடற்பயிற்சி நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள், உள்ளக விளையாட்டரங்குகள் மற்றும் நீச்சல் தடாகங்கள் என்பன மூடப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கடற்கரை களியாட்ட நிகழ்வுகள் என்பனவும் நடத்தப்படக்கூடாது எனவும் புதிய சுகாதார வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குத் துணைபோகும் வடக்கு சுகாதாரத் துறையும், கல்வித் திணைக்களமும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் பகிரங்க குற்றச்சாட்டு

நிலையறி பரீட்சை செயற்பாடு தற்போதைய சூழலில் அவசியமற்றதொரு செயற்பாடு எனத் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் மாணவர்களை முறையற்ற வகையில் பாடசாலைகளுக்கு அழைக்கும் எந்தவொரு சுற்றுநிருபமும் வெளியிடப்படவில்லை. மாணவர்களைப் பாதுகாக்கும் வகையில் தான் பாடசாலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளுக்குப் பெற்றோர்களையோ அல்லது வேறு எவரையுமோ அழைத்து எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

ஆகவே, சட்டம் இவ்வாறிருக்கையில் வடக்கு மாகாணச் சுகாதாரத் துறையும், கல்வித் திணைக்களமும் செய்கின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை அனைத்துத் தரப்பினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் மோசமானதொரு செயற்பாடு.

எனவே, இத்தகைய செயற்பாடுகளால் ஏற்படப் போகும் விளைவுகள் அனைத்துக்கும் வடக்கு மாகாணச் சுகாதாரத் துறையும், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இதற்காகப் பின்னர் மக்கள் மீது குற்றஞ்சாட்டுவதால் எந்தவொரு பிரயோசனமுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் எனவும் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொவிட் தொற்றுக் காரணமாக ஒரு வருட காலமாகப் பாடசாலைகள் திறக்கப்படவில்லை. கல்வி சுமுகமாக வழங்கப்படவில்லை. இந்நிலையில் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மாத்திரமே ஒன்லைன் கல்வியைப் பெற்றிருக்கின்ற நிலையில் அந்த வசதியைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்காகப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டு பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இந்த நிலையறி பரீட்சையை நடத்துவது ஒரு சிறுபிள்ளைத்தனமான விடயமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இது எங்கள் மாணவர்களின் உளவியலுடன் விளையாடுகின்றதொரு செயற்பாடு.

மாணவர்களுக்கான கற்பித்தலையே சுமுகமானதொரு சூழலில் மேற்கொள்ள முடியாத நிலையில் ஒன்லைன் மூலமாகவோ அல்லது வினாத்தாள்களைப் பெற்றுக் கொண்டு சென்று வீட்டிலே செய்வதன் மூலமாகவோ மாணவனின் நிலையை அறிய முடியுமா? என்பது தான் இங்கு நாம் முன்வைக்கும் கேள்வி.

ஆகவே, கற்றலைச் சுயமாக மேற்கொண்டு பரீட்சை எழுதும் மாணவனின் புள்ளிநிலை குறைக்கப்படும் போது அந்தப் பிள்ளையின் உளவியல் எவ்வாறு இருக்கப் போகின்றது? என்பதைச் சிந்திக்க முடியாத கல்விச் சமூகமாகத் தான் வடமாகாணக் கல்வித் திணைக்களம் காணப்படுகின்றது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஒன்லைன் வசதியில்லாத மாணவர்களின் பெற்றோர்கள் வினாத்தாள்களைப் பாடசாலைகளில் பெற்றுப் பரீட்சைகளைச் செய்து ஒப்படைக்குமாறு கூறியிருக்கின்றார்கள். தற்போதைய தீவிரமான கொவிட் தொற்றுப் பரவல் சூழலில் இது எவ்வளவு அச்சுறுத்தலான விடயமாகும். இதன் மூலம் தொற்றுப் பரவாதா? எனச் சுகாதாரத் துறையினரை நோக்கிக் கேட்க விரும்புகின்றேன்.

வேலணைப் பகுதியிலுள்ள பிரபலமான பாடசாலையொன்றில் ஒன்லைன் வசதியில்லாத மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்வதாக கூறிக் கொண்டு அங்கு ஏனைய மாணவர்களையும் அழைத்துக் கற்பித்தார்கள். இந்த விடயம் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்குத் தெரியவரவே நான் வேலணைப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றேன். அவர்கள் சட்டத்துக்கு மாறாகப் பாடசாலையில் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதாக நேரசூசி ஆதாரத்துடன் தெரியப்படுத்திய போதும் அவர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன்காரணமாகப் பாடசாலைக்கு வருகை தந்த மாணவன் ஒருவனுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டு, பாடசாலைக்கு வற்புறுத்தி அழைக்கப்பட்ட ஆசிரியர்களுக்குத் தொற்று ஏற்பட்டு இறுதியாக வேலணைப் பிரதேசத்தின் ஒரு கிராமமே முடக்கப்பட்டது.

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் தேசியப் பாடசாலையொன்றில் தற்போது தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. அதேவேளை அதே பாடசாலையில் மாணவர்களை அழைத்து ஆசிரியர்கள் சிலரை வற்புறுத்தி வர வேண்டும் என அழைத்து மறுபுறம் கற்பித்தலும் இடம்பெறுகிறது. இதற்கெதிராக இதுவரை சுகாதாரத் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இதனைப் பக்கச் சார்பான விடயமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

ஆகவே, சுகாதாரத் துறையினர் சுகாதார நடைமுறைகளை வெறும் வார்த்தைகளாகவும், அறிக்கைகளாகவும் மாத்திரம் அறிவுறுத்துவதை விடுத்து அதனை ஒழுங்கான வகையில் நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும்.

இலங்கையில் புதிய திரிவொன்று வருகிறது. தடுப்பூசி பெற்றிருந்தாலும் இது தாக்குப் பிடிக்குமோ தெரியாது. சிறுவர்களுக்கும் மோசமாகப் பாதிக்கக் கூடியதொரு சூழல் காணப்படுகின்றது எனச் சொல்லிக் கொண்டு வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறை இதற்குரிய நடவடிக்கைகளை இறுக்கமாக கடைப்பிடிக்காமையானது பாரியதொரு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வடக்கு, கிழக்குப் பகுதி மக்களின் நலனில் அக்கறை இல்லாத தன்மையே இதனை வெளிக்காட்டுகின்றது. வேண்டுமென்றே இது செய்யப்படுகின்றது.

நாங்கள் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தமிழ்ப் பிரதேசங்களில் கற்றல் செயற்பாடு இடம்பெறுவதாக ஒரு மாயையைத் தோற்றுவித்து தமிழ்ப் பகுதியில் எல்லாம் சிறப்பாக நடக்கின்றது எனத் தென்னிலங்கையில் இனவாதத்தைக் கூட்டுகின்ற அரசாங்கத்துக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வடக்கு மாகாணச் சுகாதாரத்துறையும், கல்வித் திணைக்களமும் செயற்பட்டு வருகின்றன. எனவே, இந்த விடயத்தில் நாங்கள் ஆழமாகச் சிந்திக்க விரும்புகின்றோம்.

இதுவரை காலமும் நாங்கள் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்தபோது ஓர் ஆசிரியர் கொத்தணி உருவாகப் போகின்றது என சுகாதாரத் துறையினரும், ஏனைய துறையினரும், மக்களும் எங்களை விமர்சித்தார்கள். எனினும், நாங்கள் பின்பற்றிய சுகாதார நடைமுறைகள் காரணமாக எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை. எனினும், விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு நாங்கள் எங்கள் போராட்ட வழிமுறைகளை மாற்றிக் கொண்டோம்.

இவ்வாறான நிலையில் கொரோனாப் பரவல் மோசமடைந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் வடக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் சட்ட விரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றால் இதன் பின்னணி தொடர்பிலும் எங்களுக்குச் சந்தேகம் எழுகின்றது. ஆகவே, இவ்வாறான விடயங்களை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றுமுழுதாக எதிர்க்கின்றது.

தற்போதைய நிலையில் பரீட்சை நடத்துவது ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காகவே என இலங்கை ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. ஒரு சிலரின் இலாபங்களுக்காக ஆசிரியர்கள், அதிபர்கள் மீது திணிக்கப்பட்டு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மாணவர்கள் மீது அக்கறைப்பட்டு இவ்வாறான பரீட்சைகள் எதுவும் இடம்பெறவில்லை. மாணவர்கள் மீது உண்மையாகவே அக்கறைப்பட்டால் மாணவர்களின் சாதாரணமான உளவியலைச் சிந்திக்க முடியாதவர்களாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினர் இருக்கின்றார்களா? எனவும் அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஐந்தாவது நிர்வாக பதவியேற்பு விழா





யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஐந்தாவது நிர்வாக பதவியேற்பு விழா யாழ்ப்பாணம் ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் செயலாளர் லயன் லெனின்குமாரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் இலங்கை மாவட்டம் 306 பி1 மாவட்டத்தின் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிஜேடஸ் பீற்றரும் அவரது மனைவி சாவித்திரியும் கலந்து கொண்டு புதிய நிர்வாக உறுப்பினர்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைத்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகங்கள் இலங்கை மாவட்டம் 306 பி1 இன் பிரதான இணைப்பாளர் லயன் சிறிபிரகாஷ், பிரதி மாவட்ட செயலாளர் லயன் மயூரதன், பிரதி மாவட்ட பொருளாளர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, பிராந்திய செயலாளர் லயன் பாலகுமார், பிராந்திய தலைவர் லயன் லெனின்குமார், வலயத் தலைவர் லயன் ஐங்கரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் ஐந்தாவது தலைவராக லயன் றொனி கஜன், செயலாளராக லயன் ஐங்கரன், பொருளாளராக லயன் நிவேதன், முதலாவது உப தலைவராக லயன் பெண்மணி மயூரிக்கா றஜீவன், இரண்டாவது உபதலைவராக லயன் சுகிர்தரூபன், ஏனைய பதவிகளுக்கு லயன் தனதீசன், லயன் ரமேஷ்குமார், லயன் அஜித் வீரா, லயன் பெண்மணி கஜீதா பத்மரூபன் ஆகியோரும் கழக இயக்குநர்களாக லயன் வைத்தியர் ஜெயச்சந்திரமூர்த்தி, லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, லயன் லெனின்குமார் மற்றும் லயன் ரமேஷ்குமார் ஆகியோரும் பதவியேற்றனர்.

மேலும் யாழ்ப்பாணம் சிற்றி லியோ கழகமும் இந்த நிகழ்வில் பதவியேற்றுக் கொண்டனர். லியோ கழகத்தின் தலைவராக லியோ கோபி, உபதலைவராக லயோ கவிநயா, செயலாளராக லியோ புஸ்பதீபன் மற்றும் பொருளாளராக லியோ றஜிதா ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் சேவைத்திட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வதியும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார முயற்சியாக தையல் இயந்திரம் ஒன்றும் யாழ் செட்டித்தெரு ஆரம்ப பாடசாலை மாணவி ஒருவருக்கு பார்வைக் கண்ணாடி ஒன்றும், லியோ கழகம் சார்பில் கொவிட்டால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூபா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இறுதியாக பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் கழக உறுப்பினர்களால் நினைவுப் பரிசு வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# தனிமைப்படுத்தல் மீறல்; 284 பேர் கைதாகினர்

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 284 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி கடந்த ஆண்டு ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் குறித்த குற்றச்சாட்டுக்காக மொத்தம் 55,173 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகளில் நேற்றைய தினம் 859 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 199 வாகனங்கள் முறையான காரணமின்றி எல்லைகளை கடக்க முயன்றமைக்காக திருப்பி அனுப்பப்பட்டன.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தனிநபர் சட்டமூலங்கள்

**சட்டம் தெரிந்தவர்கள் – சட்ட அறிவும் புலமையும் பெற்றவர்கள் – நாடாளுமன்றத்தில் இருப்பது மிக முக்கியமான விடயம்.**

**தமிழர் தரப்பில் இலங்கை சட்டத்துறையில் அதிகம் மதிக்கப்படும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றும் பணி மெச்சப்படுகின்றது.**

**வழக்கமாக நாடாளுமன்றத்தில் தனி நபர் சட்ட மூலங்கள் அதிகம் சமர்ப்பிக்கப்படுபவை அல்ல. அப்படி சமர்ப்பிக்கப்படுபவை அதிகம் கவனத்துக்கு உள்ளாகின்றமையும் இல்லை. கொள்கை ரீதியான நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணங்களாக அவை நாடாளுமன்றுக்கு வந்து பதிவுகளோடு போய் விடும். சில, பல சமயங்களில் முதலாம் வாசிப்புக்கு வந்தாலும் அதனோடு அது கிடப்பில் போய்விடுவதுதான் வழமை.**

**ஆட்சியிலிருக்கும் அரசுடன் இணங்காமல் தன்பாட்டில் தனி நபர் – பெரும்பாலும் எதிரணி உறுப்பினர் – தாக்கல் செய்யும் இத்தகைய சட்ட மூலங்கள் அதற்கு மேல் முக்கியத்துவம் பெறுவதில்லை.**

**ஆனால் சட்டம் தெரிந்த புலமையாளர் என்பதனால் சுமந்திரன் முன்வைக்கும் இத்தகைய சட்ட மூலங்கள் – ஆட்சித்தரப்புடன் சேராமல் அவர் தனிப்பட்ட ரீதியில் முன்வைக்கும் சட்ட மூலங்கள் – காலம் தாமதித்தேனும் அரசின் சட்டமூலங்களுக்கு நிகராகக் கருதப்பட்டு, அரசுகளினால் பரிசீலிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றமை சுமந்திரனின் சட்ட அறிவு, தீர்க்கதரிசனம், அரசியல் ஞானம் ஆகியவற்றுக்கு சான்று என்று கூறமுடியும்.**

**தாம் நாடாளுமன்றத்தில் எம்.பியாக வந்த பின்னர் நான்கு தடவைகள் இப்படி தனி நபர் சட்ட மூலங்களை முன்வைத்திருக்கின்றார் அவர்.**

**மஹிந்தவின் 2010 – 2015 ஆட்சிக் காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து, கடலின் அடிப்படுக்கையுடன் மீன்வளத்தை அள்ளிச் செல்வதால் அதனைத் தடுக்கும் விதத்தில் இலங்கைக் கடற்பரப்பில் இழுவை மடி வலையைப் பயன்படுத்துவதற்கு எதிராக – அதனைத் தடை செய்யும் விதத்திலாலான – தனி நபர் சட்ட மூலம் ஒன்றை முன்வைத்தார். ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அதை நிறைவேற்றச் செய்ய முடியவில்லை.**

**பின்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் 2017 இல் அத்தகைய தனி நபர் சட்டமூலத்தை அவர் திரும்பவும் முன்வைத்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டமாகியது.**

**இப்போது நாட்டை கொரோனாப் பேரிடர் தாக்கியுள்ளது. இதை ஒட்டிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விடயங்களை சட்ட ரீதியாகக் கையாள்வதற்கு உரிய சட்டங்கள் இல்லாதமையை அவதானித்த சுமந்திரன் அதனை அரசுக்குக் சுட்டிக் காட்டி வந்தார். அரசு உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில் தாமே ஒரு தனிநபர் சட்டமூலத்தை கடந்த வருடம் ஒக்டோபரிலேயே சமர்ப்பித்திருந்தார்.**

**அது ஆறு மாதகாலம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக் கிடந்த பின்புலத்தில் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முதல் வாசிப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளது.**

**அதனை மேற்கொண்டு முன்னெடுத்து சட்டமாக்க அரசு தீர்மானித்திருக்கின்றது.**

**நேற்றுமுன்தினம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்த சமயமும் சுமந்திரனின் இந்தத் தனிநபர் சட்டமூலம் குறித்து இருவரும் பேசியிருக்கின்றனர்.**

***“இந்தச் சட்டமூலத்தை முற்கொண்டு நடவடிக்கை எடுத்து நிறைவேற்ற நானும் விரும்பி அனுமதித்துள்ளேன். இது தொடர்பில் நீதியமைச்சர் அலிசப்றிக்கும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கியிருக்கின்றேன். இந்தத் தகவலை சம்பந்தப்பட்டோருக்கு தெரியப்படுத்தி அவ்விடயத்தை அவர்களுடன் முன்நகர்த்தலாம்.”*** **– என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரியப்படுத்தியிருக்கின்றார்.**

**ஏற்கனவே நாடாளுமன்ற விவகாரங்களுக்கான கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது பற்றி பேசப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் அலி சப்றி, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், புதிய சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆகியோரும் இது குறித்து சுமந்திரனுடன் பேசியுள்ளனர். அது விரைவில் சட்டமாவது உறுதி.**

**நிலுவையில் நிற்கும் மாகாண சபைத் தேர்தல்களை பழைய தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக நடத்த வழி செய்யும் தனி நபர் சட்டமூலம் ஒன்றை நல்லாட்சி அரசின் கடைசிக் காலத்தில் சுமந்திரன் சமர்ப்பித்தார். அதுவும் நிலுவையில் நிற்கின்றது.**

**அரசு, அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்குமானால் அந்தச் சட்டமூலத்துக்கும் உயிர் கொடுக்க முடியும்.**

# நடுநிலைக் கொள்கையின் அடிப்படையிலேயே நாட்டை முடக்குவது பற்றி தீர்மானிக்கப்படும்

## கெஹலிய தெரிவிப்பு



நாட்டை முடக்குவது தொடர்பாக நடுநிலை கொள்கையின் அடிப்படையிலேயே அரசாங்கம் தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

நாடு பல மாதங்கள் மூடப்பட்டதன் பின்னரே திறக்கப்பட்டது. சுமார் 15 லட்சம் அரச ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது.

எனினும் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு நாளாந்த வருமானத்தை பெறுவோர் தொடர்பில் எவரும் வாய் திறப்பதில்லை.

கொரோனாத் தொற்றில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி தடுப்பூசி ஏற்றுவதும் சுகாதார ஆலோசனைகளை கடைப்பிடிப்பதும் ஆகும்.

உலகில் பலம்மிக்க பொருளாதார வல்லமை கொண்ட நாடுகள்கூட கொரோனாத் தொற்றுக் காரணமாக ஆரம்பத்தில் நாட்டை மூடிய போதிலும் மீண்டும் நாட்டைத் திறந்ததால் இந்தத் தொற்றை எதிர்கொள்ள நேரிட்டது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்த போதிலும் அரசாங்கம் அது தொடர்பில் நடுநிலை கொள்கையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுய முடக்கத்துக்கு அனைவரும் செல்லவும் எதிர்க்கட்சிகள் மக்களிடம் கோரிக்கை!

சுய முடக்க நிலையை ஏற்படுத்திக்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துக் கட்சிகளும் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கூட்டு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த கட்சிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அந்தக் கட்சின் கூட்டணி கட்சிகளின் தலைவர்களான ரஹூப் ஹக்கீம், மனோ கணேசன் மற்றும் அமீர் அலி ஆகியோரின் கையெழுத்துகளுடன் குறித்த கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்திய ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைய சுயமுடக்கநிலையை ஏற்படுத்திக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் எதிர்வரும் 10 நாள்களுக்கு இதனை செயற்படுத்துமாறு அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்திடம் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற எவ்வித திட்டங்களோ அல்லது தேவையோ இல்லை எனவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் தொற்றின் நான்காம் கட்டத்தில் இலங்கை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஒக. 19

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலின்படி எமது நாடு கொரோனா வைரஸின் நான்காம் கட்டத்தை அடைந்துள்ளதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் உமாசுதன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து இலங்கை கொரோனாத் தொற்றுக்கு முகம்கொடுத்து வருகின்றது.

அன்றிலிருந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மக்களுக்கான அறிவுறுத்தல்களையும் விழிப்புணர்வுகளையும் காலத்துக்குக் காலம் வழங்கி வருகின்றது.



உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலின்படி எமது நாடு கொரோனா வைரஸின் நான்காம் கட்டத்தை அடைந்துள்ளது.

இதிலிருந்து மீண்டுவர சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# தடுப்பூசிகளால் கொவிட்டை கட்டுப்படுத்த முடியாதநிலை

## விசேட வைத்தியர்களின் சங்கம் அறிவிப்பு

இலங்கையில் கொவிட் தடுப்பூசி மூலம் டெல்டா வைரஸை கட்டுப்படுத்த முடியவில்லை என விசேட வைத்தியர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வேகமாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தாலும் இதுவரையில் டெல்டா வைரஸ் பரவலை தொடர்ந்து தொற்றாளர்களின் எண்ணிக்கை பாரியளவு அதிகரித்து வருகின்றனர் என சங்கத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் பரவலைத் தொடர்ந்து தடுப்பூசி மூலம் கிடைக்கக் கூடிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் சில வாரங்களுக்குள் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் எண்ணிக்கை மேலும் தீவிரமடையும்.

சரியான நேரத்தில் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லை என்றால் நிலைமை இதனை விடவும் பயங்கரமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 49

ந.வித்தியாதரன்

கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகே மிகுந்து மாவத்தையில் வாழைத் தோட்டத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ள குணசேனா கம்பனியின் உயர்ந்த கட்டடத் தொகுதியில்தான் செயல்பட்டு வந்தது சுயாதீனப் பத்திரிகா சமாஜம். அதன் வெளியீடுகள்தான் தினபதியும் சிந்தாமணியும்.

அந்தத் தினபதி - சிந்தாமணி பண்ணையின் வளர்ந்த பல டசின் பத்திரிகையாளர்கள் அந்தப் பெருமையை - அனுபவத்தை - பட்டறிவை - இப்போதும் அடிக்கடி மீளுருப் போட்டுக் கொள்வர். அந்தப் பண்ணையில் எனக்கு முன்னர் புடம் போடப்பட்டவர், மூத்தவர், தமது அழகு தமிழினால் தமிழர் மனம் கவர்ந்தவர், என்றும் என் மதிப்புக்குரிய வி.என்.மதியழகன். தமிழ் ஊடகத்துறையில் இன்றும் பல தசாப்தங்கள் கடந்தும் பெரிதும் மதித்துப் போற்றப்படுபவர். அவர் கனடாவில் இருந்தபடி தமிழ் பணியாற்றுபவர். சிவநாயகம் ஐயாவின் மதிப்புக்குரிய சிஷ்யர்களில் அவரும் ஒருவர். (சிவநாயகம் ஐயாவின் நூற்றாண்டு இது. அதனை ஒட்டி அவர் வரையும் நினைவுப் பகிர்வும் காலைக்கதிரில் விரைவில் வெளியாகும்.)

அவர் தினபதி - சிந்தாமணி பத்திரிகைப் பண்ணைக்குச் சூட்டிய நாமத்தை வழிமொழிவதில் எனக்கு தயக்கம் ஏதுமில்லை.

*"சிவநாயகத்தைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட 'தினபதி', 'சிந்தாமணி' ஆசிரிய பீடம் ஒரு பல்கலைக் கழகம் என மிளிர்ந்தது. சிவநாயகம் ஒரு கம்பீரமான துணைவேந்தர் போலவே திகழ்ந்தார். அவரிடம் நானும் படித்தேன் - ஊடகத்துறையின் அடிப்படைப் பாடங்களை"* - என்கின்றார் மதியழகன்.

இது முற்றிலும் உண்மை. தினபதி - சிந்தாமணி அலுவலகம், குறிப்பாக ஆசிரிய பீடம் ஒரு பல்கலைக் கழகம்தான். சிவநாயகம் துணைவேந்தர்தான்.



மூத்த தமிழ் அறிவிப்பாளர்
வி.என்.மதியழகன்

துணை ஆசிரியர் இரத்தினசிங்கம், செய்தி ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன், சிந்தாமணி ஆசிரியர் ராஜா அரியரத்தினம் ஆகியோர் அந்தப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள்தாம். மாஸ்டர் சிவலிங்கம், கா.த.சிவகுருநாதன், என்.பத்மசீலன், எஸ்.எஸ்.செல்வநாயகம், கருணாரட்ணம், செல்வரட்ணம், இரத்தினம், மேரி, சந்திரா போன்ற எல்லா உதவி ஆசிரியர்களும் விரிவுரையாளர்கள்தாம். ஒட்டு மொத்தத்தில் அந்தப் பண்ணையில் - பல்கலைக்கழகத்தில் - படித்த நாங்கள் எல்லோரும் தினபதி நிறுவன ஊடகப் பட்டதாரிகள்தாம்.



அந்த நிறுவனத்தில் படித்துத் தகைமை பெற்றோர் சிலர் அங்கேயே பின்னர் பணியாற்றினர் - விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் போல. என்னைப் போன்ற ஒரு சிலர் அங்கிருந்து புறப்பட்டு வந்து பிற ஊடகங்களில் அந்த அனுபவத்தின் வாண்மையைப் பயன்படுத்தினோம்.

இன்று பல்கலைக்கழகங்கள் பலவற்றில் ஊடகத்துறை டிப்ளோமா பட்டதாரி பயிற்சிநெறி எல்லாம் வந்துவிட்டன. விஞ்ஞானபூர்வமாக அத்துறையில் பயிலும் வாய்ப்பு அந்த மாணவர்களுக்கு கிட்டியிருக்கும். ஆனால் தினபதி, சிந்தாமணிப் பல்கலைக் கழகத்தில் பட்டறிவாக - அனுபவ ரீதியாக - துணைவேந்தர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா போன்ற ஜாம்பவான்கள் கீழ் பெறும் ஊடகப் பயிற்சிக்கும் அறிவுக்கும் அது நிகராகுமா என்று எனக்குத் தெரியவில்லை.

தினபதி சிந்தாமணியில் எங்களுக்குக் கிட்டியவை விரிவுரைகள் அல்ல. நாங்கள்தான் அங்குள்ள முன்னுதாரணங்களைப் பார்த்துப் படிக்க வேண்டியிருந்தது. எல்லாச் சமயங்களிலும் எங்களை அழைத்து, வகுப்பு எடுத்து, விளக்கம் தந்து, சொல்லிக் கொடுக்க மாட்டார்கள். சொல்லிக் கொடுத்தல் என்ற வழமை இருக்கவில்லை. பல சமயங்களில் நாங்கள் எழுதும் செய்திகள் கையாளப்படும் முறைகளை அவதானித்து நாம் எம்மை வழிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அழைத்துப் பேசும் போது - சந்தர்ப்பம் கிட்டும் சமயத்தில் - நாம் சேர்த்து வைத்திருந்த சந்தேகங்களை எல்லாம் வரிசைப்படுத்தி கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். பல்கலைக்கழகத்தில் இருப்பது போல அங்கு விரிவுரையாளர் - மாணவன் உறவு முறை காணப்படவில்லை. மாறாக குரு - சிஷ்யன் பண்பியல்பே அதிகம் பேணப்பட்டது. அதைப் புரிந்து கொண்டு பின்பற்றியவர்கள் பண்படுத்தப்பட்டார்கள். புடமிடப்பட்டார்கள்.

அந்த உறவு முறையில்தான் நான் அங்கு வளர்ந்தேன். அதை இருபது ஆண்டுகள் கழித்து சிவநாயகம் ஐயாவின் துணைவியார் மங்களம் அக்கா (மங்களம் டீச்சர்) எனக்கு எடுத்துரைத்தார். 2000 ஆம் ஆண்டு ஏப்ரலில் சிவநாயகம் மறைந்த பின்னர் சில மாதங்கள் கழித்து திருமதி சிவநாயகம் என்னை தமது இல்லத்திற்கு அழைத்தார்.

*"வித்தி.... உங்கள் அப்பாவின் குடும்பத்துடன் நெருங்கிப் பழகியவள் நான். உங்கள் அப்பாவின் மூத்த சகோதரி சிவகாமிஅம்மாள்தான் எனக்கும் ஐயாவுக்கும் இடையிலான திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தவர். தெரியுமா?"* என்று தொடங்கினார். நான் எல்லாம் அறிந்து இருக்கிறேன் என்றேன்.

*"ஐயா இறக்கும் முன்னர் அடிக்கடி உம்மைப் பற்றி பேசுவார். உமது பி.பி.ஸி. செய்திகளைத் தவறாது செவிமடுப்பார். தமது எழுத்துப் பாணி வித்தியாதரனில்தான் பதிந்துள்ளது என்று குறிப்பிட்டு மகிழ்வார். தன்னுடைய சிஷ்யன் அவன்தான் என்று அடிக்கடி கூறுவார். தமது எழுத்துக் கோவைகள் சிலவற்றையும் புத்தகங்களையும் சமயம் வரும் போது உங்களிடம் கொடுங்கள் என்று கூறுவார். அவற்றை உங்களிடம் ஒப்படைக்கவே உங்களை வரச்சொன்னேன். இன்னொரு முக்கிய பொருளும் உம்மிடம் கையளிக்க வேண்டும். உங்கள் அம்மாவை, உங்கள் அப்பாவுக்குப் பெண் பார்த்த போதும் உங்கள் அம்மாவின் படம் ஒன்று அப்பாவிடம் கொடுக்கப்பட்டது. உங்கள் அப்பாவின் வீட்டில் வளர்ந்த என்னிடம்தான் அந்தப் படம் உள்ளது. அதை உங்களிடம் கொடுக்க வேண்டுமென்று ஐயாவிடம் சொல்லி இருந்தேன். அதையும் இன்று தருகிறேன்."* - என்று கூறி எனது தாயாரின் 18 வயது படம் ஒன்றை புத்தம் புதிய பதிப்பு போல பாதுகாத்து வைத்திருந்து என்னிடம் தந்தார் மங்களம் அக்கா.

என் தாய், தந்தையர் இளவயதில் சினிமாப் படம் பார்க்கப் போகும்போது குழந்தையாக இருக்கும் என்னை சில சமயங்களில் தங்கள் வீட்டில் விட்டுச் செல்வார்கள் என்றும், தானும் சிவநாயகம் ஐயாவும் தங்கள் பிள்ளைகளுடன் சேர்த்து என்னையும் பேணி மகிழ்வார்கள் என்றும் பழையவற்றை நினைவு கூர்ந்தார் திருமதி சிவநாயகம்.

சிவநாயகம் ஐயாவும் மங்களம் அக்காவும் பெரிய தந்தை - பெரிய அன்னை போல சிறுவயதில் என்னை சீராட்டி இருக்கின்றார்கள். அவரின் தினபதி, சிந்தாமணி பண்ணை என்ற பல்கலைக்கழகத்தில் நான் பட்டம் பெற்றிருக்கிறேன். சிவநாயகம் ஐயாவிடம் இருந்து ஊடகத்துறையில் பல விடயங்களை நாம் அறியமுடிந்தது. படிக்க முடிந்தது.

ஆனாலும் அவரின் தகைமையில், திறமையில் ஒரு கொஞ்சத்தைத் தான் உங்களால் 'சுவர' முடிந்தது என்பதும் உண்மை. அத்துறையில் அவர் ஒரு மாமலை. நாம் கற்றதும் கைமண் அளவுதான்.

அவர் கலை,இலக்கிய, அரசியல் துறைகளில் பழம் தின்று கொட்டையும் போட்டவர். ஒரு பத்திரிகை துறை வித்தகர். அவர் தலை சிறந்த எழுத்தாளர். ஆணி அடித்தாற்போல எழுத வல்லவர். வாசகர்கள் மனதை ஊடுருவிக் கவரும் வகையில் அவர் எழுத்தோட்டம் ஆற்றொழுக்காக இருக்கும். பிசிறல், தடுமாற்றம், குழப்பம், ஐயுறவான விளக்கம் எதுவும் இருக்காது.

அவர் புகழ்பூத்த கவிஞர். அவர் யாத்த அருமையான மரபுக் கவிதைகளை எங்களால் சுவைக்க முடிந்ததே தவிர, அவற்றை விமர்சன நோக்கில் பார்க்கும் அருகதை, தகுதி கூட எங்களுக்கு இருக்கவில்லை.

வாசகர்களைக் கவரும் எழுத்துநடை எனினும் அதில் ஒரு மொழித் தூய்மை, ஒழுங்குமுறை, நேர்த்தி இருந்தது.

அவரைப் பற்றி அந்தத் துறையின் மூத்த வழிகாட்டியான வி.என்.மதியழகன் குறிப்பிடும் ஒரு விடயத்தை நான் உறுதிப்படுத்தி அங்கீகரிக்க விரும்புகிறேன்.

*"பத்திரிகைத் துறைக்குரிய ஒரு 'திமிர்' அவரிடம் அதிகம் இருந்தது. 'ஓர்மம்', 'நெஞ்சுரம்' மிக்கவராகவும் அவர் விளங்கினார். சிவநாயகத்தை ஒரு 'ராங்கிக்கார ஜென்டில்மேன்' என்று நான் விவரித்தால் அவரை நன்கு தெரிந்தவர்கள் அதை மறுக்கமாட்டார்கள்"* - என்கின்றார் நம்மில் மூத்தவரான வி.என். மதியழகன்.

அது உண்மை. முற்றிலும் உண்மை.

பத்திரிகைத்துறையில் அப்படி 'திமிர்த்தனம்' பிடித்தவன் என்று பலரும் என்னையும் விமர்சிப்பதை நான் அறிவேன். அந்த குருவின் வழிவந்த சிஷ்யன் அல்லவா? அதுதான் அந்தப் பண்பியல்பு போலும்.

(வளரும்....)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 13

## செயற்கைச் சூழலும் பசுமை எண்ணக்கருவும்

**அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம்**

* பயிர்ச்செய்கையின் விளைபொருள்கள் ஒவ்வொன்றிற்கும் வேறுபட்ட ஆயுள் காலம் காணப்படுகிறது. உதாரணமாக பழங்கள், மரக்கறி வகைக்கு ஒரு வாரம் அளவிலான ஆயுளும் நெல் வகை, தானிய வகைகளுக்கு ஒரு வருடத்திற்கும் மேலான கூடிய ஆயுட்காலமும் காணப்படுகிறது.

* ஒவ்வொரு உற்பத்தியினையும் சரியான முறையில் அறுவடையின் பின் முகாமைத்துவம் செய்வதனூடாக உற்பத்திப் பொருட்களின் உச்சப்பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம் என்றால் என்ன?

.............................................................................................................

2. அறுவடையின் பின்னரான தொழில்நுட்பத்தின் படிமுறைகள் எவை?

.............................................................................................................

3. இலங்கையில் அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை?

.............................................................................................................

4. அதனால் ஏற்படும் பாதகமான நிலைமைகள் எவை?

.............................................................................................................

**தொழில்முறை நடவடிக்கை**

1. நாம் அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்தும் இரசாயன பதார்த்த வகைகளை பட்டியலிடுக

.............................................................................................................

.............................................................................................................

2. மனித உடலில் ஓமோன் சமனிலை குழப்பமடைவதன் காரணம் யாது?

.............................................................................................................

3. இரசாயனப் பதார்த்தங்களிற்கு பதிலாக பிரதியீடு செய்யக்கூடிய இயற்கை முறை எவை?

.............................................................................................................

**கட்டட நிர்மாணம்**

1. பசுமைக் கட்டடம் என்றால் என்ன?

.............................................................................................................

2. பசுமைக் கட்டடம் நிர்மாணிக்கும் போது பின்பற்ற வேண்டிய அடிப்படை விடயங்கள் எவை?

.............................................................................................................

**பசுமைப்போக்குவரத்து**

1. பசுமைப் போக்குவரத்து என்பதனால் கருதப்படுவது யாது? .

.............................................................................................................

2. பச்சை வீட்டு வாயுக்கள் 2 தருக

.............................................................................................................

3.டர்போ (Turbo) ரக என்சின்களைக் கொண்ட வாகனப் பயன்பாட்டின்போது நெருக்கப்பட்ட வளி எரிபொருளுடன் சேர்ந்து தகனிக்கும்போது $CO_2$ வாயுவிற்கு மேலதிகமாக வளிமண்டலத்திற்கு வெளிவிடப்படும் வாயு எது?

.............................................................................................................

4. பசுமை போக்குவரத்துக்காக பின்பற்றக்கூடிய செயற்பாடுகள் எவை?

.............................................................................................................

5. உணவு பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு பசுமை போக்குவரத்தைப் பேணலாம்?

.............................................................................................................

6. காபன் அடிச்சுவடு எனப்படுவது யாது?

.............................................................................................................

7. நீர் அடிச்சுவடு எனப்படுவது யாது?

.............................................................................................................

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 13

## செயற்கைச் சூழலும் பசுமை எண்ணக்கருவும் விடைகள்

01. பூ கோள வெப்பமடைதல்
02. 2 - காபனீரொட்சைட் காலல் குறைவு
3 - இயற்கைமுறையில் பராமரித்தல்
4 - 4% நீர்ப் பாவனை குறைக்கப்பட்டுள்ளது.
5 - வலுச் சக்தி சிக்கனம்
03. பசுமை எண்ணக் கருவை
04. புவி வெப்பமடைதல் அதிகரிப்புக்கு காரணமான பச்சை வீட்டு வாயுக்களின் காலலை இழிவளவாக்கிக் கொள்ளல்.
05. புவி வெப்பமடைதல் அதிகரிப்புக்குக் காரணமான வாயுக்கள் பச்சை வீட்டு வாயுக்களாகும்.
06. காபனீரொட்சைட்டு, மெதேன், நைதரசன் ஒட்சைட்டுக்கள்

**விவசாய செயற்பாடுகள்**

01. விவசாயச் சூழற்தொகுதியின் நிலவுகை, மண் அங்கிகளின் தொழிற்பாடுகள், உயிர்ப்பல்வகைமை, உயிரியல் சக்கரங்கள் போன்றவற்றை அதிகரிக்கும் உற்பத்திச் செயன்முறைகள் சேதனப் பயிர்ச் செய்கை எனப்படும்.
02. சேதனப் பசளைப் பயன்பாடு
03. பயிர்ச் செய்கை நிலத்திலுள்ள மண்ணிற் காணப்படும் போசணையைப் பெற்றுக் கொண்டு உருவாக்கப்படும்.
04. தாவர / விலங்குப் பகுதிகள் இயற்கைச் செயற்பாடுகளுக்கு (உக்கலிற்கு) உட்படுவதன் மூலம் உருவாக்கப்படுகிறது.
05. பெரும்பாலான நுண்ணங்கிகளும் மண்புழு போன்ற பேரங்கிகளும் அழிவடைகின்றன. இதனால் சூழலின் இயற்கை நிலவுகைக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அசேதனப் பசளைகளில் அடங்கியுள்ள பார உலோகங்கள் தாவர உற்பத்திகளினூடாக மனித உடலினுள் சென்று தேக்கமடைந்து தீய விளைவுகளை ஏற்படுத்தும்.
06. 1 - பணச் செலவு குறைவு
2 - சேதன விளை நிலத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் உணவுப் பொருள்களிற்கு கேள்வி அதிகம்.
3 - சேதனைப் பசளை பயன்பாட்டால் மண்ணின் கட்டமைப்பு மேம்படும்.
07. இறந்த தாவர விலங்கு கழிவுகள்
08. களை நாசினிகள், பூச்சி நாசினிகள், பங்கசு நாசினிகள்
09. 1 - பீடைகளின் முட்டை / குடம்பிப் பருவங்களை அழிக்கக்கூடிய பல்வேறு அங்கிக் கூட்டங்களை பெருக்கமடையச் செய்தல்
2 - இயற்கையாகப் பீடைகளை விரட்டும் பதார்த்தங்களைப் பயன்படுத்திப் பீடைகளைக் கட்டுப்படுத்தல்
உ + ம் - செண்டு மல்லி, வேப்பம் வித்துச் சாறு, புல்லெண்ணைய்த் தாவரங்கள்
3 - நீர்க் கட்டுப்பாடு மூலம் பீடைப் பரம்பலைக் கட்டுப்படுத்தல்
உ + ம் - வயலை உலரவிடுதல் / நீரைத் தேக்கி வைத்தல்
10. சிறு நீரக நோய்கள், தோல் சார்ந்த நோய்கள், நரம்பு சார்ந்த நோய்கள்.

**நீர் முகாமைத்துவம்**

01. குளங்கள், ஏரிகள், நீர்ப்பாசன முறைகள்
02. ஆறு / ஓடை
03. பாரிய சமவெளிப் பிரதேசங்களின் தாழ்ந்த நிலப் பிரதேசங்களைச் சுற்றி அணைக்கட்டை நிர்மாணித்து ஆண்டு முழுவதும் மழைநீரைப் பயன்படுத்தும் வகையில் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.
04. மழையில்லாத பிரதேசங்களுக்கும் குளங்களிலிருந்து குளங்களுக்கும் கால்வாய்களூடாக நீர் பாய்ந்து சென்று நீரை சேகரிப்பதற்கு குளங்கள் உதவியாய் அமைந்தன.
05. மழை நீரைச் சேகரித்தல், துளி நீர்ப்பாசனம்

**நிலமுகாமைத்துவம்**

01. நில வளப் பயன்பாடு, அபிவிருத்தி முகாமைத்துவம் செய்தல் நில முகாமைத்துவம் எனப்படும்.
02. - 4
03 - 4
04. 1 - சரி 2 - சரி 3 - பிழை 4 - சரி 5 - பிழை
05. - 4
06. கலப்புப் பயிர்ச்செய்கை, பயிர்ச் சுழற்சி / சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை, உயிர்த் தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தப்பட்ட பயிர்ச் செய்கை.
07. - 4
08. - 4
09. - 4
10. 1 - சரி 2 - சரி 3 - சரி 4 - பிழை
11. 4

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

# கொவிட் இறப்புகள் மற்றும் தொற்றுக்கள் குறித்து அரசாங்கம் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்!

## மைத்திரிபால சிறிசேன வலியுறுத்து

இலங்கையின் தொற்றுநோய் நிலைமை தொடர்பாக உள்ளூர் மருத்துவ நிபுணர்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் கணிப்புகளைப் பரிசீலிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்தத் தொற்றுநோய் நெருக்கடியின் போது அரசாங்கம் முடிவுகளை எடுப்பதில் நெகிழ்வாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதிகரித்து வரும் கொவிட் இறப்புகள் மற்றும் தொற்றுக்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று அவர் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

உள்ளூர் மருத்துவ நிபுணர்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் கணிப்புகள் மற்றும் பரிந்துரைகளைக் கருத்தில் கொள்வது அவசியம்.

இந்தப் பிரச்சினையில் இலங்கையர்கள் அனைவரையும் கேட்டு நெகிழ்வாக இருக்க வேண்டும், என்று அவர் கூறினார். உலக சுகாதார அமைப்பு, ஒரு நட்பு அமைப்பு என்று கூறிய சிறிசேன, அந்த அமைப்பிடம் இருந்து அதிக உதவியை நாட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள அரசாங்கம், எதிர்க்கட்சிகளுடன் கூட்டுப் பொறிமுறையை அறிமுகப்படுத்துவது முக்கியம் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை ஜனாதிபதி கூட்ட வேண்டும், நாடு எதிர்கொள்ளும் முக்கியமான சூழ்நிலை தொடர்பாக அவர் விவாதிக்கவேண்டும்.

நிலவும் சூழ்நிலையால் பொதுமக்கள் தங்கள் வாழ்வின் நம்பிக்கையை இழந்து, மனச்சோர்வடைந்துள்ளனர். அவர்களின் மன உறுதியை மேம்படுத்த, ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் மைத்திரிபால சுட்டிக்காட்டினார். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க மன வலிமை முக்கியம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரிஷாத்தின் விளக்கமறியல் செப்ரெம்பர் 1 வரை நீடிப்பு

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் செப்டெம்பர் 1 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே நேற்று (புதன் கிழமை) காலை உத்தரவு பிறப்பித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் அமைச்சர் கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)



பாபா தரிசனம்பெறும் சுதா ரகுநாதன்



பாபா அரவணைப்பில் சிறுமி சுதா

**பூவிதழில் மதுஅருந்தப் புள்ளினங்கள் நாடும்**
**வாவியில் மீனினங்கள் கானமதைப் பாடும்**
**மேவிய நற்கிருபையினால் மேகவண்ணன் சத்ய**
**சாயி மலர்ப்பாதமதில் சரணடைந்தேன் நானும்!**

**வங்கக் கடலோரம் வாவிதரும் இசையில்**
**மங்காத் தமிழ்மணக்கும் மட்டுமாநகரில்**
**எத்திக்கும் அருள்பரப்பி இதயங்களில் குடிகொண்ட**
**எங்கள் சாயிதேவன் இணைபதங்கள் இறைஞ்சுகிறேன்!**

சத்தியசாயி சேவாநிலையை கிழக்குப் பிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஞா.விநாயகமூர்த்தி பாடிய இப்பாடலை ரசித்த அடியார்கள் பகவான் பாபா பெண் கலைஞர் ஒருவர்மீது பொழிந்த கருணையை அறிகின்றனர்.

மூன்று அல்லது நான்கு மணிக்கு தரிசனம் தர



சுதாவுக்கு ஏடுதுவக்கும் பாபா

வருகைதரும் பகவான் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுமானால் இரவு ஒன்பது மணிவரைகூட பிரசாந்தி நிலைய மண்டபத்தைவிட்டுச் செல்லமாட்டார். இறுதிவரை அங்கிருந்து அவற்றை ரசித்து கலைஞர்களைப் பாராட்டிவிட்டுத்தான் செல்வார். அவ்வேளைகளில் நாமும் அரிதாகக் கிடைக்கும் பகவான் தரிசனத்துக்காக நீண்டநேரம் அவர் விடைபெறும்வரை காத்திருப்போம். இத்தகைய கலாரசிகன் எங்கள் பகவான் பாபா!

இந்தியநாடு ஈன்றெடுத்த பிரபல கர்நாடக சங்கீதப் பாடகி சுதா ரகுநாதன். அவர் இருநூற்றுக்கும் மேலான பாடல்களைப் பாடி இசைத்தட்டுகளை வெளியிட்டிருக்கிறார். சர்வதேச இசைவிழாக்களில் பங்குபற்றியுள்ள பாடகி அவர். இந்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது கொடுத்து அவரைப் பாராட்டியுள்ளது.

பகவான்பாபா முன்னிலையில் பாடகி சுதா ரகுநாதன் பாடும்போது, பாபாவும் சேர்ந்து பாடிய சந்தர்ப்பங்கள் பலவுண்டு. அவர் உறுதிமிக்க பகவான் பாபா பக்தை. சிறுமியாய் இருக்கும்போதே அவரிடத்து முகிழ்த்த சாயிபாபா பக்தி அவர் வளரவளர விரிந்து ஆழமாக வேரோடியது. பகவான் சமாதியடைந்த பின்னரும் அப்பக்தி தொடரக் காண்கிறோம். அவர்தன் சொந்த வாழ்வில் நிகழ்ந்த சாயி அற்புதங்களை அழகாக நம்முடன் பகிர்கின்றார். இதோ:

'பகவான் சத்தியசாயி நிகழ்த்திய அற்புதங்கள் சிலவற்றின் சாட்சியாக நான்வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன். இன்றுவரை நான்உயிருடன் வாழ்கின்றேன் என்றால், தொடர்ந்து பாடிக்கொண்டு இருக்கின்றேன் என்றால் அதுபாபா போட்ட பிச்சை! அவர் என்னிடத்தே சொரிந்த அருளாசி அன்றோ! என் வாழ்வில் பாபா நிகழ்த்திய அற்புதத்தை என்தந்தையார் கூறக்கேட்டேன்.

அது நிகழ்ந்தது 1958 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி. புட்டபர்த்தி யாத்திரை வந்து காரில் பெங்களூர்திரும்பிக் கொண்டிருக்கும். போது என்னுடல் திடீரென விறைத்துப் போனது. உடலெங்கும் நீலம் பாலித்தது. உடலில்உயிர்ப்புஇருக்கவில்லை. வாகனம் நிறுத்தப்பட்டது. என் பெற்றோர் செய்வதறியாது திகைத்துப் போயினர். கிராமத்து மக்கள் காரைச் சூழ்ந்து கொண்டனர்.

அவ்வேளை அவர்களிடையே காணப்பட்ட முதியவர் ஒருவர், உரத்த குரலில் 'குழந்தையை இங்கேதா' என்றார். பதறிப் போய்ச் செய்வதறியாதிருந்த பெற்றோர் என்னை அவரிடம் கொடுத்தனர். முதியவர் ஏதோ மந்திரத்தை மெல்லிய குரலில் முணுமுணுத்தார். என்னுடல் மீது புனித திருநீற்றைப் பரவினார். எந்தன் நெற்றியில் திருநீற்றை சாத்தினார். அவ்வமயமே விறைத்துப் போய் உயிர்ப்பின்றிக் கிடந்த நான் உரத்த குரலில் அலறினேன். பெற்றோரும், மற்றோரும் என்னலறல் கேட்டு ஆறுதலடைந்தனர். அதிசயித்துப் போயினர். பெற்றோர் வினவியபோது தன் பெயர் ஜோடி ஆடிப்பள்ளி சோமப்பா என்று கூறிய முதியவர் பரபரப்புக்கு மத்தியில் எங்கோ போய்விட்டார்.

அதேவேளை, பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற, அன்றுமாலை ஐந்து மணியளவில் புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் பக்தர்களுக்கு பகவான் பாபா இந்நிகழ்வினைப் பற்றிக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

'குழந்தையின் தந்தை எனக்கு ஓர் ரூபா தந்தார். நானதனை ஏற்கமறுக்க, தரிசனத்தின்போது நான் வழங்கிய தோடம்பழத்தை அவர் எனக்கே தந்து மகிழ்ந்தார்'.- இப்படியும் பாபா கூறியுள்ளார்.

முதியவர் சொன்ன ஜோடி ஆடிப்பள்ளி சோமப்பா என்னும் பெயர் பகவான் பாபாவை நாம்போற்றித் துதிக்கும் நாமங்களில் ஒன்றாகும். நாம் போற்றித் துதிக்கும் ஸ்ரீசத்தியசாயிபாபா அஷ்டோத்திர நாமாவளியில் காணப்படும் 108 நாமங்களில் இந்நாமம் ஒன்றாகும்.

பாபாதான் எனக்கு கீதாசுதா என்றுபெயர் சூட்டினார். ஏன் எனக்கு அவரேதான் ஏடுதுவக்கினார். மூன்றுவயதில் அவர்மடியில் தவழ்ந்து விளையாடியவள் என்பதால், அவரிடத்தே நான் நட்புரிமை பாராட்டினேன். சிறுவயதிலேயே ஸ்ரீவெங்கடேஸ்வர சுப்ரபாதம், பஜனைகள் பாடி பாபாவின் பாராட்டுக்களை,ஆசியினைப் பெற்றவள் நான்.

துயரங்கள் ஏற்படும்போது சாயி நாமத்தைக் குறைந்தது நூறு தடவைகளேனும் உச்சரிக்க எனக்குத் தைரியம் பிறக்கிறது. அனைத்துப் பிரச்சினைகளையும் முகங்கொடுத்து வெற்றியீட்ட மனோவலிமை பிறக்கிறது. எவ்வித எதிர்பார்ப்புமின்றி, அன்புசெய்! சேவைசெய்! என்னும் பகவான் பாபாவின் ஆணையைச் சிரமேற்கொண்டு, அரசசார்பற்ற அமைப்பொன்றை நிறுவி, வசதிகளற்ற சிறார்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்திருக்கிறது.

2010 நவம்பர் மாதம் 19இல் பாபா தலைமையில் நடைபெற்ற விழாவில் நான்பாடிய வேளை, அதுவே அவர் தரிசனம் தர பாடும் இறுதித் தருணம் என்பதை அன்றுநான் அறிந்திலன். உணர்ந்திலன்.

எனினும் அவர் எனக்கு ஆசிதந்து வழங்கிய கடிகாரம் 'நான் உன்னுடன் ஒவ்வொரு வினாடியும் இருக்கிறேன்' என்று இன்றுவரை என் செவிகளில் ரீங்காரம் செய்தவண்ணம் இருக்கிறது.'

## இலங்கைக்கு 25 கோடி டொலரை கடனாக உதவியது பங்களாதேஷ்

அந்நிய செலாவணி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு ஆதரவளிக்கும் வங்கதேசத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த வாரம் பங்களாதேஷ் இலங்கைக்கு 25 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குகிறது.

வங்காளதேசத்தில் இருந்து எந்தவொரு நாட்டுக்கும் முதன்முறையாக வழங்கப்படும் இந்த கடனுதவி பங்களாதேஷ் வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஓகஸ்ட் 3 ஆம் திகதி கையொப்பமிட்ட நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும்.

ஒப்பந்தத்தின் பங்களாதேஷ் வங்கி மொத்தமாக இலங்கைக்கு 25 கோடி அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்குகிறது.

இலங்கையில் வேகமாக குறைந்து வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்றும் அதன் மாற்று விகிதத்தில் அழுத்தத்தை எளிதாக்குவதையும் இந்தக் கடன் தொகை நோக்காக் கொண்டது.

கடன் தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படுவதுடன், கடனின் முதல் தவணை (5 கோடி டொலர்) இந்த வாரம் வழங்கப்படும்.

## அதிக உப்பு பயன்பாட்டைக் குறைத்தால் தொற்றா நோய்களிலிருந்து விடுபடலாம்

அதிக உப்பு பயன்படுத்துவதனை தவிர்ப்பதன் மூலம் பல நோய்களிலிருந்து விடுபடலாம் என கொழும்பு மருத்துவ ஆய்வு நிலையத்தின் போசணைப் பிரிவு பிரதானி நிபுணத்துவ மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தொற்றா நோய்கள் பரவுவதற்கான காரணம் அதிகளவு உப்பு பயன்படுத்துவதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாள்தோறும் வீடுகளில் உப்பு பயன்படுத்தும் போது திட்டமிட்ட அடிப்படையில் உப்பு பயன்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

உப்பு பயன்பாட்டைக் குறைப்பது சிறந்த ஆரோக்கியமான பழக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சோறு சமைக்கும் போது உப்பு போடுவது அவசியமற்றது எனவும், கருவாட்டை தேங்காய் தண்ணீரில் அரை மணித்தியாலம் வைத்திருப்பதன் மூலம் உப்புத் தன்மையை குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 104

- செல்லத்துரை ரவீந்திரன் -

**303. மனிதாபிமானத்தில் திறக்கப்பட்ட பாதைகள் தற்கொலை குண்டுதாரிகளின் நடவடிக்கைகள் காரணமாக முடக்கப்பட்ட பிறகு வேறெதும் செய்யக் கூடியதாக இருந்ததா?**

ஸ்ரீலங்காவில் இருந்தபோது அரசாங்க அதிகாரிகளோடும் முடிந்தவரையில் சர்வதேசத் தூதரகங்களோடும் தொடர்ந்தும் ஒரு போர் நிறுத்தத்தையே வற்புறுத்தி அதனையும் சில புலம்பெயர் ஆதரவாளர்களிடையே விடுதலைப் புலிகளைக் கேட்கும்படி கோரினோம்.

ஆனால் புலிகள் தாங்கள் தொடர்ந்தும் போராட



வியூகங்கள் உண்டு, வெகு விரைவில் படையினரின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுவிடும் என்று அறிவித்து கொண்டிருந்தமையால் இராணுவம் தாம் முன்னேறிய நிலையிலும்,கைகள் ஓங்கியிருந்த அளவிலும், போரை முடிக்க வேண்டுமென்றே நின்றார்கள்.

எங்களைத் தவிர, நோர்வேயின் ஈடுபாட்டில் அவர்கள் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் சேர்ந்து மக்களை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்குகளை ஸ்ரீலங்காவிடம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர். நோர்வே விடுதலைப் புலிகள் சரணடைந்து, கௌரவமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் அல்லது போர் வலயங்களிலிருந்து வெளியேறக் கூடிய மார்க்கங்களையும் முயற்சிக்க அவர்களின் புலம்பெயர் அமைப்புகளோடு தொடர்பிலிருந்தனர். இவற்றின் தகவல்கள் எங்களோடும், புலம்பெயர் மக்கள் என்ற ரீதியில் கலந்துரையாடப்பட்டன. எங்களோடு ஜனாதிபதி மஹிந்த, பஸில் ஆகியோருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். அதில் கால தாமதம் ஆகியதில் நாங்கள் முன்னர் கோரியபடி பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ்சிறையிலிருப்பவர்களையும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களையும் சந்திக்க கூடிய ஏற்பாடுகள் பற்றிப் பேசினோம். அவர்களை பற்றிய பல தகவல்களை, தந்தாலும், பார்வையிடுவது ஊக்குவிக்கப்படவில்லை. நாங்கள் வெளிநாட்டுக்காரர்கள் என்பதில் அவற்றில் தயக்கம் காட்டப்பட்டன. ஆனால் அந்த வழக்குகள், விசாரணைகள் முடிந்து வழக்குகள் தாக்கல் செய்யவோ, விடுவதோ என்பது தீர்மானிக்கப்பட சட்டத்தரணிகளின் பற்றாக்குறையே முக்கிய காரணம் என காரணங்கள் சொல்லப்பட்டது. அப்படியானால் நாம் புலம்பெயர்ந்தவர்களிலுள்ள ஸ்ரீலங்காவில் படித்து பட்டம் பெற்ற சிலரைத் தன்னார்வலராக சில காலங்களுக்கு அனுப்பி, பணியாற்றி இவற்றை நிறைவு செய்யலாம் என்ற கருத்தை முன்வைத்தோம். அவை இருக்கின்ற உள்விதிகளின்படி ஏற்றுக் கொள்ளமுடியுமானால் பரிசீலிக்கப்படும் என்றார்கள்.

அதை தவிர எங்கள் குழுவிலிருந்தவர்கள், வவுனியாவில் அமைக்கப்பட்ட சில முகாம்களை பார்ப்பதற்காக அனுமதிகளும் பெற்று அங்குள்ள மக்களை சந்திப்பதற்கு வசதிகளும் செய்யப்பட்டன. அதோடு மார்ச் 31, 2009இல் பஸிலுடன் சந்திப்பும் ஏற்படுத்தப்பட்டது.

**304. பஸிலுடன் சந்திப்பு எப்படியானதாக இருந்தது?**

பஸிலை தவிர, அந்தச் சந்திப்பில் போரோடும் பாதிக்கப்பட்ட மக்களோடும் அவற்றின் முகாம்களோடும் வெளிவிவகார அமைச்சின் அலுவலர்களும் அமைச்சின் காரியதரிசி பாலித கோஹன உட்பட பலர் பங்குபற்றினார். தமிழ் மக்கள் தங்களது அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து நாட்டை சுபீட்சமாக்கி அதில் பங்குபெற்று பயனடைவதே எல்லோருக்கும் நல்லது, அதனை நாங்கள் புலம்பெயர் மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்பது அவருடைய கோரிக்கை.



கேட்கப்பட்ட சிலவற்றுக்கு பதில் தருகையில், தாங்கள் போரை நடத்தும் போதும் போர்முனையில் மீட்கப்பட்ட மக்களை நடத்துவதிலும் பின்னர் பாதுகாப்பு முகாம்களில் வைத்து பாதுகாப்பதிலும் எந்தவித சர்வதேச சட்டங்களும் மீறப்படவில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். எங்களோடு ஒளிவு மறைவின்றி நம்பிக்கையிலும் நட்புறவிலும் பேசுவதால் போர் முனையில் இருந்த நிலைகள் பற்றி அவருக்கு தரப்பட்டிருந்த சில செய்மதிப் படங்களின் அடிப்படையில் பிரபாகரன் வெளியேறிவிட்டார் என்ற வதந்திகளில் எதுவித உண்மையுமில்லை. அவர் போர் வலய பகுதியில்தான் இருக்கிறார் என்பதற்கு ஆதரமாக ஒரிரு நாள்கள் முன் எடுத்த படத்தில் பிரபாகரன் இருப்பதைக் காட்டினார். அடுத்து தாங்கள் எங்களின் மூலமாக அல்ல, மற்ற நாடுகள் முக்கியமாக நோர்வேயின் அனுசரணையோடு அவர்கள் ஆயுதங்களை கையளித்து சரணடைவதற்கு அன்றில் அவர்களின் முக்கிய தலைவர்கள் வெளியேறுவதற்கு எவ்வளவோ பேச்செடுத்தோம், நோர்வே மூலம் நேரடியாக அவர்களது முக்கிய புலம்பெயர் அமைப்பாளர்களோடு பேசப்பட்டது. அவற்றை நாம் முக்கியமாக இந்தியாவுடனும் பகிர்ந்து



கொண்டோம். இந்தியா அவர்களின் முக்கிய தலைவர்களான பிரபாகரன், பொட்டம்மான், சூசை போன்று ஏழு பேர் வெளியேற அனுமதி தரக்கூடாது என்று கண்டிமைப்படுத்துகிறார்கள். எங்களுக்கு அவர்களையோ மற்றவர்களையோ கொல்ல வேண்டும் என்ற அவா இல்லை. அவர்கள் இனித் தாக்குப்பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து சரண் அடைந்து விட்டால் மக்களும் அவலப்படத் தேவையில்லை. ஆனால் பயங்கரவாதத்தை ஒழித்து விடவேண்டும் என சர்வதேசமும் எங்களுக்கு ஆதரவு தருவதால், தாங்கள் விடுதலைப் புலிகளின் உன்மத்துக்கு எதிரேயும் அவர்கள் நாட்டுக்கு தந்த அழிவுகளுக்கும் இனிமேல் இரக்கம் காட்டும் எண்ணமில்லை என்றார்.

மேலும் துளைத்ததற்கு உங்களுடனான இந்தச் சந்திப்புக்கும் நான் சென்றதற்கு நாங்கள் ஒரு மகிழ்ச்சியானசெய்தியைப்பகிரலாம்என்பதில்தான். ஐம்பதாயிரம் அரச படையினர் விடுதலைப் புலிகளைச் சுற்றி



வளைத்து அவர்களுக்கு தப்ப வழிகள் இல்லை என்ற போதும் அவர்கள் சரணடைவது பற்றியும் அல்லது வெளியேறுவது குறித்தும் நோர்வே இந்தியாவிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தோம். இந்தியா குறிப்பிட்ட ஒன்பது தலைவர்களை தவிர சரணடையும் எல்லோருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதாக நாங்கள் நோர்வே அரசின் மூலம் விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளருக்கு அறிவித்தபோது அவர் பிரபாகரனையும் புலம்பெயர் அமைப்பாளர்களையும் கலந்தாலோசித்து முடிவு சொல்வதாக சொல்லியிருந்தார். நோர்வே பேச்சாளர்கள் விடுதலைப் புலிகள் இவற்றுக்கு சம்மதமில்லை எனவும் தாங்கள் கடைசிவரையும் ஸ்ரீலங்காவிடம் சரணடையப் போவதில்லைஎனத்தெரிவித்ததாகவும்சொல்லப்பட்டது. ஆகவே படைகளை முன்னேற்றி போரை முடிவுக்கு கொண்டுவர ஜனாதிபதி அனுமதி கொடுத்துள்ளார். சில நாள்களில் அவை முடிந்துவிடும். அதைத் தொடர்ந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வழிக ளில் நாங்கள் உதவிகள் எதிர்பார்ப்பதாகக் கூறப்பட்டது. பஸில் சாதாரணமாகவும் வெற்றியின் நம்பிக்கைத் தொனியிலுமே பேசினார்.

பாதிக்கப்பட்ட மக்களை நீங்கள் சுதந்திரமாக சென்று சந்திக்கலாம். அவர்களை நாங்கள் ஒரு பொறுப்புள்ள அரசாகப் பார்க்கிறோம். அவர்கள் பட்ட அவலங்களை அவர்களிடமிருந்து நீங்கள் நேரடியாகவே கேட்பது நல்லது - என்றார்.

அவர்களுக்கு சில குறைகள் இருக்கலாம். அவற்றை கேட்டு தெரிவியுங்கள் எனவும் கோரப்பட்டது.

(வளரும்....)



# ஒருவரிடமிருந்து ஆறு பேருக்கு பரவும் ஆபத்துக் கொண்டது டெல்டா வைரஸ்

## வைத்தியர் ஆதவன் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஒக. 19

டெல்டா தொற்று ஒருவரிடமிருந்து ஆறு பேருக்கு பரவும் என வைத்தியர் எம்.ஆதவன் தெரிவித்தார்.

அத்தோடு, நோயாளர் எண்ணிக்கை பல மடங்கானால் நோயாளிகளைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் டெல்டா திரிவு மிக வேகமாக பரவி வருகின்றது என்றும் முதலில் கண்டறியப்பட்ட கொரோனாவைவிட டெல்டா இரண்டு மடங்கு வீரியமாகப் பரவக்கூடியது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில், ஒரு டெல்டா தொற்றாளர் இன்னும் ஆறு பேருக்கு இந்த நோயைப் பரப்ப முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு வைத்தியசாலைகளில் தொற்று நிலைமை கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதால் வைத்தியசாலைகளின் பராமரிக்கும் திறனுக்கு மேலாக நோயாளர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

நோயாளர்கள் எண்ணிக்கை சற்று அதிகரித்தால் யாழ்ப்பாணத்திலும் இந்நிலை ஏற்படும் என்றும் இதனை நாங்கள் குறைக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு தனிநபரும் சில சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

அதன்படி, வீட்டிலிருந்து அநாவசியமாக வெளியில் வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஏதாவதொரு காரணத்துக்காக வெளியில் வந்தால் போதிய சமூக இடைவெளியைப் பேணி எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை சரியாக அணிந்திருத்தல் அவசியமாகும் என அவர் வலியுறுத்தினார்.

# கொவிட் பாதித்த சிறுமி மீது கொட்டியது சுடுநீர்!

## வைத்தியசாலையில் சேர்ப்பு

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்த சிறுமி ஒருவரின் உடலில் சுடுநீர் ஊற்றப்பட்டதன் காரணமாக ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பத்து வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சில நாள்களுக்கு முன்னர் சிறுமி மற்றும் அவரது தாயார் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் சுகாதார அறிவுறுத்தல்களின்படி வீட்டில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்தநிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி பின்னர் சிகிச்சைக்காக கொரோனா பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# 146 எம்.பிக்கள் தடுப்பூசி பெற்றனர்

இலங்கையின் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 146 பேருக்கு மட்டுமே ஓகஸ்ட் 12 நிலைவரப்படி கொவிட் தடுப்பூசி, செலுத்தப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, 2021 பெப்ரவரி 16 ஆம் திகதி ஆரம்பித்தது.

எனினும், இதுவரை 146 உறுப்பினர்களுக்கு மட்டுமே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 122 பேர் நாரஹேன்பிட்ட, இராணுவ மருத்துவமனையில் இந்தியாவின் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியை இரண்டு அளவுகளில் பெற்றுள்ளனர்.

24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி மருந்தை நாடாளுமன்ற சுகாதார மையத்தில் வைத்து செலுத்திக் கொண்டனர்.

எனினும் இதுவரை கொவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத உறுப்பினர்களின் விவரங்கள் மற்றும் காரணம், தம்மிடம் இல்லை என்று தகவல் அதிகாரியும் நாடாளுமன்ற உதவி பொதுச் செயலாளருமான டிக்கிரி கே. ஜெயதிலக கூறியுள்ளார்.

ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் மொடர்னா, பைசர், சினோபோர்ம் மற்றும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளைப் பெற்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்கள் நாடாளுமன்றத்தில் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 14 நாள்களில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொவிட் இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, அம்பாந்தோட்டை மாவட்ட, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் - திலீப் வெதராச்சி, மாத்தளை மாவட்ட பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன திசாநாயக்க மற்றும் பதுளை மாவட்ட பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்- ஜனக திஸ்ஸகுட்டி ஆராச்சி ஆகியோர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

# தொழிற்சங்கங்கள் ஊடாக நாட்டை முடக்க ஏற்பாடுகள்

கொழும்பு, ஒக. 19

தொழிற்சங்கங்களின் ஊடாக நாட்டை முடக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தேசிய தொழிற்சங்க மையம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் நாட்டை முடக்குவதற்கான தீர்மானத்தை எடுக்காவிட்டால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுமென அந்த மையத்தின் தேசிய அமைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார்துறை பிரிவுகளை உள்ளடக்கிய தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பாதுகாப்பு தொடர்பாக சிந்திக்காது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றதெனவும் அவர் இதன் போது குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து குறித்த நடவடிக்கையினை முன்னெடுக்கவுள்ளன என வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# சாதாரண ஏழை மக்களே கொவிட்டால் அதிகம் சாவு

இலங்கையில் கொவிட் தொற்றால் ஏற்படும் மரணங்கள் தொடர்பில் அதிர்ச்சிகரமான தகவலை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனெத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.

இதுவரை கொவிட் தொற்றால் ஏழை மக்களும், யாருடைய அவதானமும் இல்லாத மக்களுமே அதிகமாக உயிரிழந்துள்ளார்களே தவிர தீர்மானம் எடுப்பவர்களுக்கு மத்தியில் மரணம் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மக்களுக்கு வீடுகளில் இருக்க வேண்டிய மாற்று நடவடிக்கை உள்ள நிலையில் பிரபுகளுக்கு 100 கட்டில்கள் கொண்ட பாதுகாப்பு நிலையத்துக்கு செல்ல அனுமதி உள்ளதென அவர் கூறியுள்ளார்.

இதனால் வைரஸ் பரவுவதற்கு இடமளித்தல் மற்றும் பொருளாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்களை மரணிக்க இடமளிப்பது இலகுவான ஒரு தீர்மானம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறான பதிவொன்றை பதிவிட்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பூசியின் மூன்றாவது அளவை பூஸ்டராக பயன்படுத்தல் அவசியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவிப்பு

இலங்கையில் ஒரு பூஸ்டர்(மூன்றாவது) தடுப்பூசியை செலுத்தினால், அது நோய் பரவுவதை நிறுத்தும் அல்லது குறைக்கும் மற்றும் மேலும் பிறழ்வைத் தடுக்கும். அத்துடன் பிறழ்வு மாறுபாடு தடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசியின் மூன்றாவது அளவை பூஸ்டராகப் பயன்படுத்துவது அவசியம் என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், மக்கள் தொகைக்குள் ஒரு வைரஸ் தீவிரமாகப் பரவி, அதிக எண்ணிக்கையிலானவர்களை பாதிக்கும் போது, மூன்றாவது தடுப்பூசிக்கு குறைந்த பட்சம் 1.5 கோடி தடுப்பூசிகள் தேவை என்று சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

12 - 18 வயதினருக்கான தடுப்பூசியை செலுத்துவதும் இந்த நேரத்தில் தீவிரமாக ஆராயப்பட வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் வலியுத்தியுள்ளது.

கொவிட் பரவுவதைக் குறைப்பதற்காகவும், எதிர்கால நலன் கருதி, தடுப்பூசியின் மூன்றாவது அளவு என்ற கருத்து உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பூசி வகை மூலம் பூஸ்டர் தடுப்பூசியைக் கண்டறிந்து திட்டமிட வேண்டியது அவசியமாகும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பூசி வகைகளுடன் கொவிட்டுக்கான தடுப்பூசியின் அதிகரித்த அளவுகளை செலுத்த பல நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, இஸ்ரேல், ஜேர்மனி மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகள் இந்த நாடுகளில் உள்ளடங்கியுள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் விசேடமாக இராணுவ ஆட்சி பிரகடனமா?

## கேள்வியெழுப்பிய சட்டத்தரணி சுகாஷ்



யாழ்ப்பாணத்தில் விசேடமாக இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கின்றதா என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொன்னாலையில் இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டமைக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 2021.08.15 அன்று இரவு இராணுவத்தினர் பொன்னாலைப் பகுதியில் உள்ளவீடுகளுக்குள்நுழைந்து மிலேச்சத்தனமாக தாக்குதல் மேற்கொண்டதில் பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்கள்.

எனக்கு எழுகின்ற கேள்வி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகின்ற கடப்பாடு பொலிஸாருக்கு இருக்கிறதா அல்லது இராணுவத்துக்கு இருக்கிறதா? மக்களுடைய வீடுகளுக்குள் நுழைந்து தாக்குகின்ற அதிகாரத்தை இராணுவத்துக்கு யார் வழங்கியது?

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசமைப்புக்கு உட்பட்ட ஆட்சியா அல்லது இராணுவ ஆட்சியா? என்ற கேள்விகள் எங்களது மனதிலே எழுந்திருக்கின்றன.

பொன்னாலைப் பகுதி மக்கள் இராணுவத்தினரின் வெறியாட்டத்தால் மிகவும் அச்ச உணர்விலே இருக்கின்றார்கள். இராணுவத்தினரின் இவ்வாறான மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இது சட்டம் ஒழுங்கு முன் உரிய ஒரு மனித உரிமை மீறல். இலங்கையிலே சித்திரவதைகளும் இராணுவத்தினரின் அட்டூழியங்களும் தொடர்ந்து இருக்கின்றன என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

வருகின்ற செப்டெம்பர் மாதம் ஜெனிவாவிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினுடைய அமர்வு ஆரம்பமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு இலங்கை அரசின் கோரமுகத்தை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. - என்றார்.

Dear Children ,.
We welcome your articles for RADIANT DAWN, our Sunday supplement in English. Use no more than 250 words. Send in word file.
gmail - kalaikkathiredu@gmail.com

# நாட்டை முற்றாக முடக்கவேமாட்டேன்; கடும் பயணக்கட்டுப்பாடுகளே அமுல்!

## அமைச்சரவை சந்திப்பில் கோட்டாபய திட்டவட்டம்

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், நாட்டை முழுமையாக முடக்காது, பயணக்கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கு மாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவ னம் செலுத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதுதொடர்பில் உரிய தரப்பினருக்கு அவர் பணித்துள்ளார் எனவும் அறியமுடி கின்றது.**

**நாடளாவிய ரீதியில் இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணிவரையிலான ஊரடங்கு சட்டம், கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.**

**இந்த ஊரடங்கு உத்தரவை, வார இறுதி நாள்களில் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவித்திருந்தன.**



அத்துடன் அந்த ஊரடங்கு உத் தரவை ஒரு மாதத்துக்கு முழுமையாக பிறப்பிப்பதுதொடர்பில்கலந்துரையாடல் கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அந்தத் தகவல்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு பணித்துள் ளார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், தனது தலைமை யில் திங்கள் இரவு நடைபெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின் போதே, நாட்டை முழுமையாக மூடமாட்டேன் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நாட்டை முழுமையாக மூடினால், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலைமையொன்று ஏற்படும். அன்றாடம் வாழ்க்கை நடத்தும் ஒரு பிரி வினர் கடுமையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அமைச்சரவைக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட் டுப்படுத்துவதற்குத் தடுப்பூசி ஏற்றலைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளை யும் எடுக்குமாறும் உரிய தரப்பினருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

# வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரனுக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)
யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வர னுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையின்போதே தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள் ளது.

இதற்கு முன்னர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன வுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அவருடன் பழகியவர் என்ற அடிப்படை யில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுய



தனிமைப்படுத்தலில் இருந்தார்.

இந்தநிலையில், நேற்று வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவர் தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# வெள்ளிக்கிழமை தொடக்கம் கிளிநொச்சி நகருக்கும் பூட்டு!



கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றமையைத் தொடர்ந்து அத னைக் கட்டுப்படுத்தும் முகமாக கிளி நொச்சி நகர வர்த்தகர்கள் அனைவரும் எதிவரும் நாளை வெள்ளிக்கிழமை முதல் 28 ஆம் வரை தங்களது வர்த்தக நிலையங்களை மூடு வதற்குத் தீர்மா னித்துள்ளனர் என கிளிநொச்சி நகர வர்த் தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்று மாலை கிளி நொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.விஜயசிங்கம், செயலாளர் ச.பாஸ்கரன், பொருளாளர் க.ஆனந்த வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு இந்தத் அறிவித்தலைத் தெரிவித்துள் ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரி விக்கையில்,

நாளுக்கு நாள் கிளிநொச்சி மாவட்டத் தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதி கரித்து வருகின்றனர். நேற்று மாத்திரம் 257 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவொரு ஆபத் தான நிலைமை. எனவே, வர்த்தகர்க ளாகியநாம்அனைவரும்ஒன்றிணைந்து எமது வர்த்தக நிலையங்களை சில நாள் களுக்குப் பூட்டி தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அந்தவகையில் எதிவரும் 20ஆம் திகதிமுதல்28திகதிவரைமருந்தகங்கள், வாகனத் திருத்தகங்கள் தவிர ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிகளில் வர்த்தகர்கள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள கொரோனா பரிசோதனை மேற் கொள்ளும் இடங்களில் தங்களைப் பரி சோதித்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது மக்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து வர்த்தகர்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறும் கேட் டுக்கொள்கின்றோம் - என்றனர்.

# நாட்டை நாமே முடக்குவோம்!

## தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

நாட்டில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 10 நாள்கள் கட்டாயப் பொது முடக் கத்தை முன்னெடுக்க நேரிடும் எனப் பல்துறைசார் தொழிற்சங்கங்கள் அர சுக்கு எச்சரிக்கை விடுத் துள்ளன.

கொரோனாத் தொற்று மோசமடைந்து வரும் நிலையில் நாளை வெள்ளிக்கிழ மைக்கு முன்பாக அரசு பொது முடக்கம் தொடர்பில்தீர்மானிக்க வேண்டும் எனவும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மை நாள்களாக கொரோனாத் தொற்றால் நிலைமை மோசமடைந்துள் ளது. பொதுமுடக்கத்தை அறி விக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், அந்தக் கோரிக்கைகளை அரசு புறந்தள்ளி வருகின்றது. இந்த நிலையில், தொழிற்சங்கங்கள் கூட்டாக இதனை அறிவித்துள்ளன.

இலங்கையில் கொரோனா திரிபுகள் உருவாகும்வரைபார்த்துக்கொண்டிராது, நாட்டைஅசு முடக்க வேண்டும் இதனை செய்யத் தவறினால், அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து நாட்டை முடக்கும் முயற்சியில் ஈடுபடு



வோம் என்று சங்கத்தின் இணை ஏற்பாட் டாளர் ரவி குமுதேஷ் இதன்போது தெரி வித்துள்ளார்.

எதிர்வரும்வெள்ளிக்கிழமைவரை அவ காசம் வழங்கப்படும். ஒன்றும் நடக்கா விடின் எதிர்வரும் 23ஆம் திகதி திங் கட்கிழமை முதல் நாட்டை முடக்குவோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதாரத்துறை சார்ந்த தொழிற்சங் கங்கள் தமது கடமைகளை உரிய வகை யில் முன்னெடுக்கின்றன. ஏனைய அனைத்துத் துறைகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்களை இணைத்து நாட்டை முடக்குவோம் என்றும் சங்கத் தின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மங்கள காலமானார் என்ற செய்தி உண்மையில்லை



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர காலமானார் என்று பரவி வரும் செய்தி யில் உண்மை யில்லை என அவருக்குச் சிகிச்சையளித்து வரும் வைத்தியர் ஒரு வர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மங்கள சமரவீர கொரோனாத் தொற் றுக்குள் ளாகி, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மங்கள சமரவீர காலமானார் என நேற்று காலை முதல் சமூக வலைத்தளங் களில் போலிச் செய்திகள் வருகின்றன.

இது குறித்து மங்கள சமரவீரவின் ஊட கப் பிரிவினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இது முற்றிலும் உண்மைக் குப் புறம்பான செய்தி என்று உறுதிப்படுத் தினர்.

அத்துடன், அவரது நிலைமை கவலைக் கிடமாக இருந்தாலும் வைத்தியர்கள் அவருக்குத் தொடர்ந்து சிகிச்சையளித்து வருகின்றனர் என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தினர்.

# எறிகணை மீட்பு!

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் - வேட்டைய டைப்புப் பகுதியில், நேற்று காலை எறிகணை ஒன்று மீட்கப்பட் டுள்ளது.

மல்லாவி பொலிஸாருக்குக் கிடைக் கப்பெற்ற தகவலையடுத்து, குறித்த எறி கணை மீட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆலங்குளம் குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக் கப்பட்டு, குறித்த எறிகணை செயலிழக் கப்பட்டுள்ளது.

# வடமாகாணத்தில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## என்கிறார் வாசுதேவ



வடக்கில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அதற்கான வேலைத்திட்டமாகவே வவுனியா நீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

வவுனியா மாவட்டத்தில் 2 பிரதேச செயலகங்களின் கீழுள்ள வவுனியா நகரம் மற்றும் வவுனியா தெற்கு பிரிவுகளின் கார்தாசின் குளம், மகரம்பகுளம் மற்றும் மாமடுவ ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் குடிதண்ணீர்க் குழாய்களை பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

8.7 கிலோ மீற்றர் தூரத்துக்கு குடிதண்ணீர் குழாய் பொருத்துதல் மற்றும் புதிய இணைப்புக்களை வழங்குதல் என்பன இடம்பெறும். இதற்காக 462.4 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா நீர் திட்டத்துக்கு நீர் பெற்றுக் கொள்ளும் இடமாக சேராறு நீர்த்தேக்கம் காணப்படுகின்றது. வவுனியாவுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கு இந்த நீர்த்தேக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவுக்குத் தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்கு நீர் பெற்றுக்கொள்ளும் வளங்கள் போதுமானளவு காணப்படுகின்றன.

புதிய குழாய்களைப் பொருத்தி அனைவருக்கும் குடிதண்ணீர் வழங்குவது எமது வேலைத்திட்டமாகும். அதற்காகத்தான் நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

வருடாந்தம் நாம் வரவு செலவுத் திட்டம் மூலம் குறிப்பிடத்தக்க அளவு குடிதண்ணீருக்காக நிதியை ஒதுக்கி எமது நீர் வழங்கல் அமைச்சு பணியாற்றி வருகின்றது.

அதன் மூலம் வடக்கிற்கும் வவுனியா பிரதேசத்துக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் மூலம் வடக்கில் குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதே எமது நோக்கமாகும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குழு மட்டு நகரில் கைது



மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவந்த குழுவொன்றை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளமையுடன், அவர்களிடமிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினரால் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லடி பகுதியிலுள்ள வீடு ஒன்று செவ்வாய் காலை முற்றுகையிடப்பட்டதுடன், அங்கிருந்து 300 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 15 கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் கார் மற்றும் மோட்டார்சைக்கிள் என்பன மீட்கப்பட்டமையுடன், அங்கிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 38 லட்சம் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய போதைப் பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கல்முனையிலும் போதைப்பொருள் விற்பனை நிலையம் கல்முனை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டமையுடன், அங்கிருந்து 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த முற்றுகையின்போது பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்கள் கொழும்பில் உள்ள பிரதான போதைப்பொருள் வியாபாரிகளுடன் ஏற்பட்ட தொடர்புகள் மூலம் போதைப்பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்துள்ளனர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இது தொடர்பான விசாரணைகளையும் காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பில் விஷ ஊசி செலுத்தி கொல்லப்பட்ட நாய்களால் சர்ச்சை

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நீண்டகாலமாக வாழ்ந்த 15 நாய்கள் விஷ ஊசி செலுத்திக் கொல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விலங்குகள் சட்டத்தின் கீழ் விலங்குகள் உரிமை அமைப்பு குருந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

மாநாட்டு மண்டபத்தின் பிரதானி ஒருவரால் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா மதிப்புள்ள ஒப்பந்தத்துக்கமைய நாய்களுக்கு விஷம் கொடுத்து கொல்லப்பட்டதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நாய்களுக்குக் கருத்தடை தடுப்பூசி போடப்பட்டதாகத் தம்மிடம் தகவல் வழங்கப்பட்டது. எனினும் அந்த நாய்கள் கொல்லப்பட்டுள்ளன என விலங்குகள் உரிமைகள் தொடர்பான குழு தெரிவித்துள்ளது.

07



**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள - இராசதானி காலத்துடன் தொடர்புடைய சிவாலயம் எது?**

..........................................................................

**2. கந்தசஷ்டி கவசத்தை அருளியவர் யார்?**

..........................................................................

**3. காவடிக் கந்தன் எனப் புகழ்பெறும் குமராலயம் எது?**

..........................................................................

**4. ஈழத்துச் சிதம்பரம் எனப் புகழப்படும் சிவாலயம் எது?**

..........................................................................

**5. "பரமனை மதித்திடாப் பங்கயாசனன்..." எனத் தொடங்கும் பாடல் யாருக்குரிய வழிபாடாகும்?**

..........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

07

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : -------------------------------------------------------
2. பிறந்த திகதி : -------------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : -------------------------------------------------
4. பாடசாலை : -----------------------------------------------------------
5. முகவரி : -------------------------------------------------------------

..........................................
கையொப்பம்

# நிரம்பி வழியும் கொரோனா நோயாளிகள் நேரமின்றி தத்தளிக்கும் வைத்தியத்துறை!

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. ஆதங்கம்



நாடெங்கிலும்கொரோனாநோயாளிகள் நிரம்பி வழிகின்றனர். வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற முடியாத அளவு இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது. அவர்களுக்கு சிகிச்சை அளிக்க நேரம் இல்லாமல் வைத்தியர்களும் தாதியர்களும் தத்தளித்து கொண்டிருக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

தலிபான்களின் தொடர் போராட்டமும் கொள்கைப்பிடிப்பும் இலக்கு நோக்கிய பயணமும் அவர்களை இன்று தமது தாய்நாட்டை அடைய வைத்திருக்கின்றது.

தலிபான்களின் விடுதலை என்பது சரியா பிழையா என்பது பிரச்சினையல்ல. சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்கு போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தைத் தந்திருக்கின்றது. இந்த நாடு மிகப் பெரியதோர் அபாயத்துக்குள் சிக்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

ஆனால் குருந்தூர் மலையிலே பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று பாரிய விகாரையை அமைக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொன்னாலையில் சிறிய குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினைக்காக பொன்னாலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் சென்று அங்குள்ளவர்களை தாக்கியுள்ளனர்.

'இவ்வாறு தாக்கும் அதிகாரத்தை யார் உங்களுக்கு தந்தது' என்று அங்குள்ளவர்கள் கேட்டுள்ளனர். எங்கு பார்த்தாலும் இராணுவம் குவிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் மத்தியில் ஓர் இராணுவ அச்சம் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் கொரோனா உள்ளது. அதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.அவர்களுக்கு சரியான நிவாரணம் சென்றடைவதில்லை.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் மீதான விசாரணைகள், நிலப்பறிப்புகள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருக்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி கிடைக்கும்? நாங்கள் கேட்பது இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் இந்த மண்ணுக்குரிய தனித்துவமான அடையாளத்துடன் கூடிய தேசிய இனம். 21ஆம் நூற்றாண்டில் தலிபான் இயக்கம் தன்னுடைய நாட்டை ஆயுத வழியில் வென்றுள்ளது.

நாங்கள் ஆயுதம் பற்றி பேசவில்லை. எமது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் 12 ஆண்டுகள் கடந்து பேசுகின்றோம்.

ஆகவே, நாங்கள் கேட்பது ஆயுத ரீதியான போராட்டத்தையல்ல. ஆனால் நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கட்டும் பிரதமராக இருக்கட்டும், சிங்கள தலைவர்களாக இருக்கட்டும்.சற்று சிந்தியுங்கள்.

இன்று உலக ஒழுங்குகள் மாறுகின்றன. உலக சூழல் மாறுகின்றது. எத்தனையோ சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்கு போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தை தந்திருக்கின்றது. தலிபான்களின் விடுதலை என்பது சரியா பிழையா என்பதல்ல. ஆனால் அவர்களால் முடிந்திருக்கின்றது. ஒரு பெரிய நாட்டை அவர்களால் மீட்டெடுக்க முடிந்திருக்கின்றது என்றால் அது ஒரு மாற்றம். இந்த உலக பந்தில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவ ரீதியிலான, ஆயுத ரீதியிலான ஒரு மாற்றம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்.மாவட்டத்தில் கொவிட் சாவு 185!

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றில் நேற்றுமுன்தினம் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 62 வயதுடைய ஆணொருவரும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 185 ஆக உயர்வடைந்துள்ளது.

## வைரஸ் தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்தவரை சுகாதார அமைச்சராக நியமித்திருக்க வேண்டும்!


சம்பிக்க தெரிவிப்பு

வைரஸ் தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நபர் புதிய சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும், நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மருத்துவ நிபுணர் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இலவசக் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டு முக்கியமான துறைகளில் இலங்கை முன்னணியில் உள்ளது. இந்தத் துறையில் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் சக தொழில் வல்லுநர்களின் மரியாதையைப் பெற வேண்டும்.

இருப்பினும் புதிய நியமனங்கள் ஏமாற்றத்தை மட்டுமே ஏற்படுத்தியுள்ளன. ஒரு தகுதி வாய்ந்த நிபுணரை சுகாதார அமைச்சராக நியமிக்க அரசாங்கம் தவறிவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோர் அந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்களாக இருந்திருப்பார்கள்.

எவ்வாறாயினும், புதிய அமைச்சரின் நியமனம் மருத்துவ ஊழியர்களிடையே மேலும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும், அமைச்சரவை மாற்றத்தின் மூலம் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு!

### ஒருவர் காயம்

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஒருவர் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தன் குமாரவேளி ஆற்றில் நேற்று (புதன்கிழமை) காலை மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் மீது சிவில் உடையில் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போதே மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த 26 வயதுடைய முருகையா சசிகுமார் என்பவர் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து, குறித்த நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிவாயு தட்டுப்பாடு காரணமாக இணையத்தில் விறகு விற்பனை

நாட்டில் சமையல் எரிவாயுவிற்கு காணப்படும் தட்டுப்பாட்டு நிலைமையால் இணைய வழியாக விறகு விற்பனை செய்யப்படுகின்றது.

இணைய வழியாக மளிகைப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்யும் பிரபல நிறுவனமொன்று இவ்வாறு விறகு விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

ஒரு கட்டு (ஐந்து கிலோ கிராம்) விறகு 140 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண் அடுப்புடன் ஒரு கட்டு விறகு 390 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இணைய வழியாக விறகு விற்பனை செய்ய முடியும் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் துலித் ஹேரத் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். நாடு முழுவதிலும் சமையல் எரிவாயுவிற்கு கடுமையான தட்டுப்பாடு நீடித்து வரும் நிலையில் இவ்வாறு இணைய வழியாக விறகு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டில் வெடி தயாரித்த தம்பதியினர் படுகாயமடைந்து வைத்தியசாலையில்

**அம்பாறை – அளிக்கம்பை பிரதேசத்தில் வீட்டில் வெடி தயாரித்த நிலையில்,வெடி வெடித்து படுகாயமடைந்த நிலையில் தம்பதியினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**பன்றிக்கு வெடி வைக்க வீட்டில் வெடி தயாரித்த போது அவை வெடித்து இவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**அக்கரைப்பற்று, அளிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய குலன் மற்றும் அவரது மனைவியான 62 வயதுடைய வெங்கட்மேரி என்பவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.**

## காபூலின் அவல நிலை விரைவில் இங்கும் வரும்!

### எதிர்வுகூறும் சாணக்கியன்

தற்போது காபூலில் மக்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்கின்றமையை போன்று எதிர்காலத்தில் இலங்கையிலும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் நாட்டை விட்டு தப்பி செல்லும் நிலை உருவாகும் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சபையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

தற்போது அமைச்சரவை மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளது, இதனைப் பார்க்கும் போது சீட்டுக் கட்டு விளையாட்டு நினைவுக்கு வருகின்றது. இதில் கோமாளிகள் இரண்டும் இருக்கும். அந்த இரண்டு கோமாளிகளையும் ஒதுக்கிவிட்டே சீட்டுக்கட்டு பிரிக்கப்படும்.

அதேபோன்று தான் தற்போது அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனது அமைச்சு மாற்றப்பட்டதற்காக ஒப்பாரி வைக்கின்றார். அவருக்கே தெரியாமலே அவரது அமைச்சுப்பதவி பறிபோனதாக தெரிவிக்கின்றார்.

கோமாளிகளே இவ்வாறான தீர்மானம் எடுத்துள்ளனர். இந்த நாட்டை ஆட்சி செய்வதும், தீர்மானங்கள் எடுப்பதும் கோமாளிகள் என்றே கூற வேண்டும். அதேபோல் பலி கொடுப்பது குறித்தும் அவர் கதையொன்றை கூறியுள்ளார். ஆனால் உண்மையில் இவர்கள் அனைவரும் சேர்ந்து நாட்டு மக்களையே பலிகொடுத்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2021 இல் வெளியிடப்பெற்றது.